ஸ்ரீமதேராமாநுஜாயநம:

வடவேங்கட

நாராயணசதகம்.

மூலமும்-உரையும்.

திவ்வியகவி

நாராயணதாசர்

அருளிச்செய்தது.

இஃது
மயிலம்.
சுப்பிரமண்ணியசுவாமிகளால்
பார்வையிடப்பட்டு.

ரு- வெங்கடாசலமுதலியார் - குமாரர்


முனிசாமிமுதலியாரது

மாதவசிவாசவச்சுக்கூடத்திற்.

பதிப்பிக்கப்பட்டது.

விஷு ௵ மார்கழிமீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.



ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

வடவேங்கட

நாராயணசதகம்

மூலமும் - உரையும்.

பாயிரம்.

நேரிசைவெண்பா.

நஞ்சுவினைக்காமமுத னமதுயிர்க்காம்
செஞ்சொல்லினேர்சதகஞ் செப்பியது-விஞ்சுபுகழ்
நாராயணதாசர் நன்றாகநானிலத்தே
பாராயணஞ்செய் பவர்க்கு.

(இ-ள்) மிகுந்தபுகழுடைய நாராயணதாசரென்பவர் செஞ்சொற்களினாலே திருவாய்மலர்ந்தருளிய நாராயணசதகம்மென்னும் பாமாலையானது இந்தப்பூமியினிடத்தில் அன்போடுபாராயணஞ்செய்பர்களாகியநமக்குநம்முடைய விஷமாகும் ஊழ்வினையையழிக்கும் நம்முடையவுயிரைக்காக்கும் அமுதமாகும்-எ-று.

காப்பு.

நேரிசைவெண்பா.

நல்லவடவேங்கடத்து நாராயணசதகம்
சொல்வெனக்குத் துணையாமே-மல்லர்
பணையானதிண்புயத்துப் பாண்டவர்க்குமுன்னந்
துணை யானபாதந் துணை.

(இ-ள்) அழகியவடக்கின்கணுள்ள திருவேங்கடத்தி லெழுந்தருளி யஸ்ரீமந்நாராயணன்விஷியமாக ஓர்சதகமென்னும் பாமாலைபாடுதற்கு ப்பலம்பொருந்திய பருத்ததாகிய அழுத்தமுள்ள புயங்களைப்படைத் தபாண்டவர்க்கு முற்காலத்தில் துணையாயிருந்த அவருடைய பாதங்க ள் துணையாயிருப்பது மன்றி என்னுயிர்க்கும் அவைகளே துணையாகு ம் எ-று.

நூல்.

கலிவிருத்தம்

பிரிந்திசைவண்ணம்.

நீர்கொண்டுதன் மலர்கொண்டுநன் னெறிகொண்டுநின் குறி கொண்டுவண், சீர்கொண்டுவந் தனைசெய்துனைச் செரிவார்களென் பெறுவார்களோ, பேர்கொண்டிலன் பொறிகொண்டிலன் பெரியோர் களா லருள்கொண்டிலன், நார்கொண்டுகண்டருள் சோதியே நாரா யணா நாராயணா.

(இ-ள்-) பரிசுத்தமான தீர்த்தங்களையும் குளிர்ச்சிபொருந்திய புட்ப ங்களையுங்கொண்டு நன்மார்க்கத்தையறிந்து தேவரீருடைய சொரூப த்தைத்தெரிந்து அழகிய ஞானத்தைப் பொருந்தித் தண்டன்சமர்ப்பி த்து உம்மைஆராதனைசெய்து அடைந்தபேர்களெல்லாம் என்ன பல னைப் பெறுவார்களோ அறிகில்லேன்நாயினேன் தாசியநாமமுதலிய பஞ்சசம்ஸ்காரத்தையும் பாகவதராலேகிருபையும் கொண்டவனே அ ல்ல ஆதலால் அன்புகூர்ந்து சந்தோஷித்து இரட்சித்தருள வேண்டும் சோதிமயமாகியஸ்ரீமந்நாராயணனே-எ-று. (க)

பரகாரியம் பலசெய்துனைப் பணியாமலே பிணியானபின்
விரகாயிருந் தழுதாவதென் வெறியார்குணங் குறியார்களோ
உரகாரிமே லுபகாரியா யொருசாரியா வுலவாரியா
நரகாரியே முரகாரியே நாராயணா நாராயணா.

(இ-ள்) கொலை களவு- காமம்- பொய்- வஞ்சனை இவைமுதலாகிய அ நேகதுஷ்டகிருத்தியங்களைச்செய்து தேவரீரைப்பணியாமல் பிணியா னது சம்பவித்தபிற்பாடுங் கபடமாயிருந்து அழுதினாலே உண்டாகி யகாரியம் ஒன்றுமில்லை ஆகையால் பயித்தியக்காரர் குணங்களை நல் லோர்களே யறிந்து இரட்சித்துகடன் அத்தன்மை போல அடியே னை இரட்சிப்பது உமக்கேகடன் சர்பங்களுக்குப் பகையாகிய கருட வாகனமீதி லெழுந்தருளி அடியார்களுக் குபகாரமாக வொப்பில்லா

த சேவையாய் உலாவியந்தருளாநின்ற ஐயனே நரகாசுரனுக்குமவை ரியாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (உ)

சிவனிதலம் புயனிதலிந் திரனிதல்சந் திரனிதலா
தவனிதல்விண் ணவரிதன்மா தவரிதலோ டெவரிதனும்
அவனிதலந் தனிலெண்ணினுன் னடியாரடிப் பொடியாகுமோ
நவனிதமுண் கருமேகமே நாராயணா நாராயணா.

(இ-ள்) சிவனும்பிர்மாவும் இந்திரனும் சந்திரனுஞ்சூரியனுந் தேவர்களும் ரிஷிகளும் இவர்களுடனேபின்னும் யாவர்களுங்கொடுக்கா நின்ற பலன்களையெல்லாம் பூதலத்தில் எண்ணிப்பார்க்குமிடத்திற்றேவரீருடைய அடியார்கள் திருவடிகளும் ஒப்பாகமாட்டாது ஆதலால் அவர்களைநினைப்பதேயில்லை கோபாலர்கிரகத்திலேவெண்ணெயையுண்டருளும் நீலமேகவண்ணனாகிய ஸ்ரீமந்நாராயணனே எ-று. (க)

அலசத்தகும் பிணிவந்துநா னலையாமலே யமரர்க்கிடுங்
கலசத்திலோர் துளிநல்கியென் கவியைக்கொளாய் கருணாகரா
குலசக்கரன் சலகேசரன் குலகேசரன் புகழ்சாகரா
நலசக்கரா சலசக்கரா நாராயணா நாராயணா.

(இ-ள்) தேகமானதுவருத்தத்தை யடையும்படியான நோய்வந்து அடியேன் அலையாமலிருக்க தேவர்களுக்குக் கொடுத்தருளாநின்ற கலசத்தமிர்தத்திலே ஒருதுளி கடாட்சத்தருளி அடியேனுடைய கவிதையைக்கொள்ளவேண்டுங் கருணைத்திருமேனியனே வச்சிர பாணியுங்கங்காதரனும் குலசேகரராகிய ஆழ்வாரும் தோத்திரம் பண்ணாநின்றகீர்த்தியாகிய சமுத்திரத்தையும் நல்லசக்கரத்தையும் தாமரைமலர்போன்ற திருக்கரங்களையுமுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணனே என்றவாறு. (ச)

எதிரும்பெரும் பிணியும்பரந் திரையுஞ்செறிந் தெறிலும்பறந்
ததிரத்திரிந் துடலங்கொளுந் துயரந்தெளிந் துனைநம்பவா
மதியங்கிடந் தொளிருஞ்சடா மகுடந்தொறுந் தொனியும்பவா
னதிவந்தெழும் பதபங்கயா நாராயணா நாராயணா.

(இ-ள்) தேகத்திலே யெதிர்த்துவராநின்ற பெரியதாகியநோய் மிகுந்து இரைப்புநெருங்கி அழகுகுலைந்து உதிரமூர்ந்து கொள்ளாநின்ற துக்கமானது தெளிந்து பேயித் தேவரீரை அடியேன் நம்பும்படியாகப் பிரசன்னமாக வேண்டும் சந்திரன் வாசமாய்ப் பிர

காசியாகின்ற சிவனுடைய சடாமகுடந்தோறும் முழக்கம் நிரைந்திட ஆகாயகெங்கையானது வந்தருளாநின்ற திருவடித்தாமரைகளையுடைத்தாகியஸ்ரீமன்னாராயணனே எ-று. (ரு)

எல்லாருமுன் னுதரத்துளே யென்னேநேமங் குறைகின்றபேர்
அல்லாதுவே றில்லாமையா லனைவர்க்குமோ ரருளல்லவோ
வல்லாருளார் மாட்டாருளார் வறியாருளார் வாழ்வாருளார்
நல்லாருளார் பொல்லாருளார் நாராயணா நாராயணா,

(இ-ள்) அடியேனுடனே ஆத்மகோடிகளெல்லாந் தேவரீருடைய குட்சிகுள்ளேவாசம் பண்ணுகிறதேயல்லாமல் வேறேயிடமில்லையாதலால் யாவருக்குஞ்சமானமான கிருபையேயன்றிப் பேத மில்லையே அத்தன்மையாயிருக்க இதிலேவலியரென்றும் மெலியரென்றும் தாழ்வினரென்றும் வாழ்வினரென்றும் நல்லவரென்றும் பொல்லாதவரென்றும் உண்டாயதென்னமாயமோ ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (சு)

நீகாசுதா நீதூசுதா நீயாடுதா நீமாடுதா [னேன்
போகாதபேர்க் கிடுசோறெனப் புலையர்க்குநெஞ் சுருகச்சொ
ஆகாதகா ரியமென்னிடத் தளவற்றதுண் டவையாய்வையோ
நகாசலா நாகாலயா நாராயணா நாராயணா.

(இ-ள்) பணமும் வஸ்திரமும் ஆபரணமும் சாதமு மிவைகளை நீங்கள் கொடுங்களென்று சொல்லுவதற்குயோக்கிய மில்லாதபேர்களாகிய மிலேச்சருடையநெஞ்சானது உருகும்படியாய்க்கவிதைபாடித் தேடிக்கொண்ட பொல்லாதகாரியங்கள் கணக்கில்லாம லடியே னிடத்திலிருக்கின்றன அவைகளையாராய்ந்துபாராமல் இரட்சிக்கவேண்டுஞ் சேஷமலையையும் சேஷனுகிய கோவிலையும் பெற்ற ஸ்ரீமந் நாராயணனே-எ-று. (எ)

அயனுரெழுத் தளவன்றியே யதிகங்கணப் பொழுதாயினும்
பயனுபிருப் பவரில்லையிப் படிமீதிலப் படியன்றியே
வியனுபுனைத் தொழுவார்களவ் விதிவெல்வராய் மறைசொல்லு
நயனுதன் புகழ்சோதியே நாராயணா நாராயணா. (மே

(இ-ள்) பிரமதேவனானவன் எழுதினபிரகாரமேயல்லாமல் அதிகமாகக்ஷணப்போதிலாகிலும் இந்தப்பூமியிலே பிரயோசனப்பட்டிருப்பவரில்லை யென்றாலும் அப்படியல்ல வென்று சந்தோஷமாகத் தேவரீரைத்தொழுத பேர்களெல்லா மந்தவிதிவசத்தைக் கடந்திருப்பார்

களென்று வேதங்கள் முறையிடுகின்றதே நயத்தோடுங் கூடிய நாரத மகாமுனிவர் தோத்திரம்பண்ணுகின்ற சோதிமயமாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (அ)

ஓமங்களால் விரதங்களா லுயர்தீர்த்தயாத் திரைகோடியால்
ஏமங்கள்கன் னியரீதலா லெழுபாரையுஞ் சுழல்கின்றதால்
ஆமைம்புலன் கடிகின்றதா லடைபுண்ணியங் கணமேனுமின்
நாமம்புகன் றதுபோலுமே நாராயணா நாராயணா.

(இ-ள்) ஓமங்களாலேயும் விரதங்களாலேயும் உயர்ச்சி பெற்றகோடிதீர்த்தயாத்திரைகளாலேயுஞ் சுவர்னங்களுடனே கன்னிகாதானங்களாலேயும் ஏழுபூமியையும் பிரதட்சணம் வந்ததினாலேயும் உண்டாகிய பஞ்ச விந்திரியங்களை நீக்கினதினாலேயும் வாராநின்ற புண்ணியங்களெல்லாம் தேவரீருடைய திருநாமத்தை க்ஷணப்போதாகிலுஞ் சொல்லிய புண்ணியத்துக்கு ஒப்பாகமாட்டாது ஸ்ரீமந் நாராயணனே எ று. (௯)

பாடேனலோ கவிசிந்துனைப் பணியேனலோ பலகாலெழுந்
தாடேனலோ பலிபீடமுன் னணுகேனலோ சடகோபமே
சூடேனலோ வலமாகவே சுழலேனலோ கதியென்றுனை
நாடேனலோ கொடியேனலோ நாராயணா நாராயணா

(இ-ள்) தேவரீரைக்கவிதைகளாலே பாடினதுமில்லை தண்டன்சமர்ப்பித்ததுமில்லை பலகாலமுமெழுந்து ஆடினதுமில்லை பலிபீடத்தின்முன்னேவந்ததுமில்லை சடகோபத்தைமுடியிலே சூடினதுமில்லை வலமாகச்சூழ்ந்ததுமில்லை கதியென்றுநினைத்ததுமில்லை இத்தன்மையானபாவியானவன் கடைத்தேறு மார்க்கமுளதோ ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௰)

அறவைக்கெலா மடிமூலநா னருளுக்கெலா மடிமூலநீ
பிறருக்கெலாம் பெருவித்ததும் பெருவிப்பதும் பிணிதட்டிலே
உறவைக்கிலென் னுயிர்காவலுக் கொவ்வாதுவா துரைசெய்வனோ
நறவத்துழா யணிமார்பனே நாராயணா நாராயணா,

(இ ள்) லோகங்களுக்கெல்லாம் அடிவேராகியிருப்பது யானேயன்றிவேறில்லை கிருபைகளுக் கெல்லாம் மூலகாரணமாயிருப்பது தேவ

ரியேயன்றிவேறில்லை அயலார்களுக்கு நீர் செய்தபலனையும் இனிச்செய்கின்றபலனையுந் தராசினுடைய கட்டுகளிலே பொருந்தவைத்தாலௌன்னுடையவுயிரை இரட்சிக்கின்ற பலனுக்கு அவை சரியாகமாட்டாது ஆகலால் வாதுபேசுவதில்லை தேன் பொருந்துந் திருத்துளவந்தரித்த திருமார்பை யுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணனே என்றவாறு. (௰௧)

பசியாதமந் திரமேவரும் பழியாதமந் திரமந்தகன்
விசியாதமந் திரநோயிலே விழியாதமந் திரநெஞ்சிலே
முசியாதமந் திரமோதுவார் முதலானமந் திரமொன்றிலே
நசியாதமந் திரமோநமோ நாராயணா நாரயணா.

(இ-ள்) பசியையெழுப்பாதது எவர்களாலேயும் பழிப்பில்லாததுயமபாசத்திற் கட்டுப்படாதது நோயைப்பார்க்காது நெஞ்சிலே கெடுதலில்லாதது ஓதுவார்க்கெல்லாம் முதன்மையானது ஒன்றினாலேயும்நாசமில்லாதது அவையாதெனில் ஓம்நமோ நாராயணாவென்னுந்திருமந்திரமேயல்லது வேறில்லை ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௰௨)

அபராதமா கியபல்சரக் கடலாகவோ டமதேற்றியே
விபரீதநோ யலையிற்குளே விடுகின்றதூழ் வினையென்செய்வேன்
இபராசனைக் கரையேற்றுநீ யெனையேற்றலிங் கரிதல்லவே
சுபராசனே சுபராசனே நாராயணா நாராயணா

(இ-ள்) அபராதங்களாகிய பலசரக்குகளை நெருக்கமாகத் தேகமென்னும் ஓடத்திலேயேற்றி விபரீதநோயாகிய கடலுள்ளே ஊழ்வினையானது தள்ளுகின்றது என்செய்வேன் கஜேந்திரனைக்கரையேற்றினதேவரீர் அடியேனைக்கரையேற்றுதற்கு இவ்விடத்தில்அரிதல்லவேதேவர்களுக்குஞ் சுபங்களுக்குங் கர்த்தாவாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-ன்று.

வான்சொல்லுமே புவிசொல்லுமே மறைசொல்லுமே நிறைசேடன்வாய், தான்சொல்லுமே முனிவோர்பெருஞ் சபைசொல்லுமே சசிசொல்லுமே, தேன்சொல்லிபங் கிறைசொல்லுமே திசைசொல்லுமே திகையாமலே, நான்சொல்லவே துவமாவெனோ நாராயணா நாராயணா,

(இ-ள்) தேவர்களுடைய நாவும் உலகத்தோருடையநாவும் வேதங்களுடைய நாவும் கல்வி நிறைந்த ஆதிசேடனுடைய இரண்டாயிர

ம் நாவும்பெரிதாகியசபையோடுங்கூடியமுனிவருடைய நாவும்சந்திர
ன்முதலாகியநவக்கிரகங்களுடையநாவும் தேன்போலுஞ்சொல்லினை
யுடைய பார்வதிபாகத்திலிருக்கும் ருத்திரனுடையநாவும் திக்குப்பா
லகருடையநாவும் தோத்தரிக்கும்படியான தேவரீருடையகீர்த்தியை
மாறுபடாமல் அடியேனுடையநாவினாலேசொல்வதற்குக் காரணமா
வனேசொல்லும்ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௧௪)

சுருக்காமருந் துடற்கூறியே சுழற்றுமருந் தழற்றீயிலே
உருக்காமருந்துலர்த்துண்டையாவுருட்டாமருந் துழக்கெண்ணையில்
கருக்காமருந் திகற்கையிலே கசக்காமருந் திருக்கல்லிலே
நருக்காமருந் திருக்கின்றதே நாராயணா நாராயணா.

(இ-ள்) வெளியிலே சுருங்காததுஉடலிலேயூறினாற் சுழற்றாததுஅ
க்கினியிலே யுருகாதது உண்டையாகவுருட்டி யுலர்த்தாதது உழக்
கெண்ணெயிலே கருக்காதது வலியகைகளிலே கசக்காதது இரண்டு
கல்லிலேநெருக்காதது இத்தன்மையைக்கொண்ட மருந்தானது இரு
க்கின்றது அதுயாதெனில் அஷ்டாக்ஷரமேயன்றிவேறில்லை ஸ்ரீமந்நா
ராயணனே-எ-று. (௧௫)

தகவாயுனைப் புகழாமலே சலமேதொடுத் திகல்பேசுவார்
முகவாயிலே புழுவீழுமே முனையந்தகன் கிளைபோதுமே
ககவாகனா மிகுமோகனா கனகங்களே பரமார்பெலாம்
நகவாளினா லரிசீயமே நாராயணா நாராயணா.

(இ-ள்) மேன்மையாகத்தேவரீரைத் தோத்திரஞ்செய்யாமல் கோ
பமேபொருந்திப் பகையாகஇழிவு பேசுவாருடைய முகத்தோடுங் கூ
டியவாய்களிலே புழுக்கள்சொரிவது மல்லாமல் எதிர்க்கின்ற யம
தூதர்மோதுவார்கள் கருடவாகனனே மோகசொருபனே இரணிய
னுடையமார்பையும் அவனதுசேனைகளையும் நகமென்னும்மாயுதத்தி
னாலேசங்கரியாநின்ற நரசிங்கரூபமாகிய ஸ்ரீமந்நாராயணனே. (௧௬)

தலமேழையும் படமோதினுஞ் சலமோவிடா தகிலாண்டநற்
பலம்யாவுமென் மனைசேரினும் பகைபோகிடா திசைமாதரா
குலம்யாவுமின் பமதியினுங் குறுகாதுமால் பெறுகாயமே
நலமேவுமே பொலமேவுமே நாராயணா நாராயணா.

(இ-ள்) ஏழுலோகத்தையும் அழியும்படியாய்ப் போர்பண்ணினாலும் கோபங்களடங்குவதில்லை அகிலாண்டங்களிலே யிராநின்ற நன்மையான பாக்கியங்களெல்லாம் என்வீட்டிலேநிறைந்தாலும் ஆசைகளொழிவதில்லை பெண்களென் றிசைந்தசாதிகளெல்லாம் இன்பங்கொடுத்தாலும்காமங்கள்நீங்குவதில்லை இத்தன்மையைக்கொண்ட என்னுடையதேகமானது எத்தன்மையைப்பொறுமோ அறிகில்லேன்பிரகாசியாநின்றமேகவண்ணனான ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௰எ)

பண்டிட்டதா மரையுந்திற் படிவார்நினக் கடியாரெனத்
தொண்டிட்டுநின் றொழில்கொள்வதோ துயரத்திலேயடைவிப்பதோ
கொண்டிட்டநின் புகழ்நிற்கவே குறையாளரைப் புகழ்கின்றவரய்
கண்டிட்டபாழ் வலையொக்குமே நாராயணா நாராயணா,

(இ-ள்) பழமையாயிராநின்ற தேவரீருடைய நாபிகமலத்திலே பொருந்தினவுயிர்களையெல்லாம் அன்பராகும்படி அடிமை கொண்டு கயிங்கிரியத்தைக்கொள்ள வேண்டுமேயல்லாமல் துக்கங்களடையச் செய்யலாமோ வேதங்கள்கொண்டிராநின்ற உம்முடைய கீர்த்தியை விட்டுக்குறைசசலான தெய்வங்களைப் புகழாநின்றவர்களெல்லாம் கண்டிட்டுத்தோண்டிவிட்ட பாழ்வலைக்குளப்பாயதேயன் றிப் பிரயோசனமில்லை ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௰அ)

பகையானவன் பிணிசெய்ததோர் பதினாயிரம் பிழையுண்டுநான்
வகையாநினக் குரைசெய்கிலேன் வருநோயுநின் னருளாதலால்
மிகையானபின் முறையிட்டனென் விடுவித்திடாய்விளையாடினால்
நகையார்களோ குறையார்களோ நாராயணா நாராயணா.

(இ-ள்) அடியேனுடையதேகத்திலே பகையாகிய பொல்லாதபிணியானது செய்யாநின்றவுபத்திரவங்கள் பதினாயிரமுண்டு இன்னவிதங்களென்றுதேவரீருக்கு விண்ணப்பஞ்செய்கிலேன் வாராநின்றஇந்தநோயானது உமதுகிருபையேயல்லாமல்வேறில்லை ஆதலால்துன்பம்வந்தபிற்பாடுமுறையமிட்டேன் இதைநீக்கிவிடாமல் விளையாடினால் உலகத்தார்நகைப்பதுமல்லாமல் இகழ்ச்சியும்பண்ணுவார்கள் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௰௯)

குப்புற்றகன் றுடனாகெலாங் குழுவாகவோர் குழலூதவே
பட்புக்கொளுந் தொனிகாதிலவ் வழியேகுபுட் களுருண்ணவே

துப்புக்குமோர் தயிர்வெண்ணெய்பால் சொரிகைக்குமவ் விடநங்கை மார், நட்புக்குமா டியகண்ணனே நாராயணா நாராயணா.

(இ-ள்) துள்ளினகன்றுகளுடனே பசுக்களெல்லாங் குவிந்திருக்கவு ம் ஆகாயவழியிலேசெல்லா நின்றபட்சிகளுடைய காதுகளிலே கேட் கவும்ஒப்பிலாதவேணு குழலூதித்தொனியாக தப்புக்கொட்டினது மல்லாமல் அங்கிருக்கும் இடையபெண்கள் பொழியாநின்ற நெய் க்கும் மோருக்கும் தயிருக்கும் வெண்ணெய்க்கும்பாலுக்கு மவர்களு டையநட்பினுக்கும் நடனஞ்செய்தகண்ணனாகிய ஸ்ரீமந்நாராயணா-எ ன்றவாறு. (௨௰)

தாயற்றபேர் தாயாகுவாய் தமரற்றபேர் தமராகுவாய்
சேயற்றபேர் சேயாகுவாய் செயலற்றபேர் செயலாகுவாய்
வாயற்றபேர் வாயாகுவாய் மலையோலுநோய்க் குலைநம்பினால்
நாயிற்றுமுன் பனிநிற்குமோ நாராயணா நாராயணா.

(இ-ள்) தாயில்லாதபேர்களுக்குத் தாயாகவும் சுற்றமில்லாதபேர்க ளுக்குச் சுற்றமாகவும் பிள்ளையில்லாதபேர்களுக்குப் பிள்ளையாக வும் உதவியில்லாதபேர்களுக்கு உதவியாகவும் வாக்கில்லாத பேர்களுக்கு வாக்காகவும் அருளாநின்றதேவரீரை அடியேன்மலைபோலுங்கொண் டநோய்க்குநம்பினால் சூரியன்முன்னே பனிநீங்குமாருபோல் நீங்கு மேயன்றிநிற்குமோ ஸ்ரீமன்நாராயணா-எ-று- (௨௧)

மந்தன்புதன் குருவெள்ளிசேய் மதிராகுகே தரிநாடொறுந்
தந்தம்பொலா விடமேவினுஞ் சகலேசனின் சரணண்டினால்
எந்தம்பிரா னிவனென்றுகொண் டேகாதசப் பலனீவரோ
நந்தன்சுதா நம்பும்பதா நாராயணா நாராயணா.

(இ-ள்) சனிபுதன்குருசுக்கிரன்செவ்வாய்சந்திரன் ராகுகேது சூரி யன்இவர்கள்நாடோறுந் தங்கள்தங்கள்பொல்லாத ராசிகளிலேயிருந் தாலும் சகலத்துக்கும்ஈசனேதேவரீருடைய திருவடியை அடைந்தா ல்எங்களுடையதம்பிரானிவனேயென்று அன்புகொண்டு பதினோரா மிடத்துப்பலனைக்கொடுப்பார்கள்நந்தகோபனுடையதிருக் குமாராநா யினேன்நம்பாநின்றபரமபதத்தையுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணா - எ ன்றவாறு- (௨௨)

ஆற்றாமையொன் றமையாமையொன் றறியாமையொன்றருளா மையொன்;தேற்றாமையொன் றிசையாமையொன் றின்னாமையொன்

றிருதாளையும் போற்றுமையொன் றடியாருடன் பொலியாமையோ ன் ெறாருமெய்யிலே, நாற்றுய்விளைந்திடலாகுமோ நாராயணா நாராயணா.

(இ-ள்) அயலார்வாயைக்கண்டு அவதிப்படுத்தல்பொறுமை நீங்குதல்பேதமைவளர்தல் ஈதன்மறுத்தல் முயற்சியிடைதல் இங்கிதமழிந்தல்பொறுமைமிகுதல் திருவடிப்புகழ்விடுதல் அடியாருடன்கூடாதிருத்தல் இவைகளெல்லாம் நாயினேனுடையவொருதேகத்துக்குள்ளேநாற்றுகள்போலேவளரலாமோஸ்ரீமந்நாராயணா-எ-று (உ௩)

தன்மைக்குநீ யடியேனுடைச் சலிகைக்குநீ பொலிகைக்குநீ
மென்மைக்குநீ வன்மைக்குநீ மிகுதிக்குநீ தகுதிக்குநீ
புன்மைக்குநீ புலமைக்குநீ பொறுமைக்குநீ மறுமைக்குநீ
நன்மைக்குநீ இன்மைக்குநீ நாராயணா நாராயணா.

(இ-ள்) அடியேனுடைய ஒழுக்கத்துக்கும் சலிகைக்கும் பிரகாசத்துக்கும் மெலிமைக்கும் வலிமைக்கும் குற்றத்திற்கும் முயற்சிக்கும் பொல்லாங்குக்கும் அறிவுக்கும் பொறுமைக்கும் மோட்சத்துக்கும் நன்மைக்கும் துன்மைக்கும் சகலத்துக்கும் தேவரீரேயல்லாமல்வேறில்லை ஸ்ரீமன்நாராயணா-எ-று. (௨௪)

வேட்பித்ததுன் பெருநெஞ்சமே வியபித்ததுன் விளையாடலே
கேட்பித்ததுன் பலநூல்களே கிளர்ப்பித்ததுன் பதிவாசமே
பேட்பித்ததுன் கனசத்திலே பிழைப்பித்ததெம் பிணிப்பித்தநாள்
நாட்பிச்சையுந் தரவேண்டுமே நாராயணா நாராயணா.

(இ-ள்) உமதுதிருவுள்ளமேயெனக்கு இன்பந்தந்தது உமதுதிருவிளையாடலேயெனக்குச்சந்தோஷஞ்செய்வித்து உமது இவ்வியப்பிரபந்தமுதலாகியபுராணங்களேயெனக்குக்கேட்கப்பண்ணியது உமதுதிருப்பதிகளேயெனக்குவாசத்தையுண்டாக்கியது உமதுகனம்பொருந்தியவலிமையேயெனக்குஆதரவுபுரிந்தது ஆதலாலடியேனுடைய குற்றத்தையும்வெவ்விதாகியநோயையும்நீக்கிவிட்டு இனிவாழ்நாளாகிய பிச்சையுந்தரவேண்டும் ஸ்ரீமந்நாராயணா-எ-று. (உ௫)

பூரிக்குநின் கொடியென்னவே புளகிக்குநின் சனமென்னவே
ஈரிக்குநின் சபையென்னவே யிரதிக்குநின் புகழென்னவே

ஆரிக்குணம் பெறுதேவர்தா னடியாருளத் தானந்தமே
நாரிக்குவில் லொடியச்செய்தாய் நாராயணா நாராயணா.

(இ-ள்) உமதுகருடக்கொடியேயென்றால் எனதுதேகம் பூரிக்கும் உமதுஅடியார்களேயென்றால் எனதுமயிர்புளகிக்கும் உமதுசபையேனென்றால்எனதுகண்களிலே ஆனந்தபாஷ்பம்பெருக்கும்உமதுபுகழேயென்றால் எனதுமனதுரம்மிகரும் ஆதலாலித்தன்மையான குணத்தைத்தேவர்களிலே எவர்கள்தானபெற்றார்கள் பாகவதருடைய இருதயத்தில் ஆனந்தமானவனேஜானகிக்காக ருத்திரன்வில்லையொடியச்செய்தருளாநின்ற ஸ்ரீமந்நாராயணா எ-று. (உ௬)

தேன்பாடிதா வனமாலையுந் திருவாழிசங் கழுமேந்தியே
தான்பாடினா ரதனுடமுன் சபைமானிடக் கதிதூரமே
வான்பாடிப் புயலென்றுதான் வருமென்றுவா டிவதென்னவே
நான்பாடினால் வரவேண்டுமே நாராயணா நாராயணா.

(இ-ள்) நாரதமகாமுனியானவர் பாடியாடாநின்ற தேவரீருடைய சபையானதுமானிடர்களுக்கு அதிகதூரமாகவிருக்கும் ஆதலால்வரக்கூடாது வானம்பாடியென்னும்பட்சியானது நீருண்டமேகங்களொன்றைக்குவருமோவென்று மனதுவாட்டங்கொண்டதுபோல அடியேன்வருந்திப்பாடினால் அத்தன்மைபோலவந்து இரட்சித்தருளவேண்டும்வண்டுகள்பாடித்தாவாநின்ற ஸ்ரீமந்நாராயணா-எ-று. (உ௭)

மானேயுநின் னருளுற்றநாள் வாய்நீர்மருந் தாயங்ஙனே
தானேடுநின் னருளற்றநாள் சஞ்சீவினையத் தளியேறுமே
தானுனையண் டினபேர்கடா மடியாருளங் கானந்தமே
நானேதவா ஞானேதயா நாராயணா நாராயணா.

(இ-ள்) மகத்தாகியநோய்களெல்லாந் தேவரீருடையகிருபையைப்பெற்றநாளையிலே உமிழ்நீரேமருந்தாகி அங்ஙனேஓடிப்போகும் உமதுகருணையில்லாதகாலத்திலே சஞ்சீவியைக்கொடுத்தாலுந் தள்ளிவிட்டு அதிகமாகுமாதலாலிதையறிந்தபேர்களை அடைந்தபேர்கள்சுகத்தைப்பெறுவார்கள் அடியார்கள்இருதயத்தில் ஆனந்தமானவனேநாயினேன்தோத்திரம்பண்ணினால் ஞானஉதயஞ் செய்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா-எ-று. (உ௮)

ஈசன்பரன் பிரமன்பிதா விறைவிண்டுவண் டுறைதண்டுழாய்
வாசன்சரா சரனென்றுநின் வழியன்பர்வாழ் பதிதன்னிலே
நிசங்கடம் பிணிதாழுமே சிறைசண்டவஞ் சனைவீழுமே
நாசங்கடந் துயிர்வாழுமே நாராயணா நாராயணா.

(இ-ள்) ருத்திரனுக்கும் பரமனேயென்றும் பிரமனுக்குத்தந்தையேயென்றும் கர்த்தனேயென்றும் விஷ்ணுவேயென்றும்வண்டுகளுடனே குளிர்ச்சிபொருந்தாநின்றதிருத்துழாயினிடத்தினில்வாசனேயென்றுஞ்சராசரங்களானவனேயென்றுந்தேவரீரைத்தோத்திரம்பண்ணிவழிபடாநின்ற அடியவர்கள்வாழ்ந்தருளுந்தலங்களிலே பொல்லாதசங்கடங்களும்நோய்களும்சிறைகளும் போர்களும் வஞ்சனைகளும் இவைமுதலாகிய குற்றங்கள்யாவும்நீங்கிமற்றவுயிர்களெல்லாம் வாழ்ந்திருக்கும் ஸ்ரீமந்நாராயணா-எ-று. (௨௧)

ஆபாதவா யுனைவையுமே யடியாருடன் படைபண்ணுமே
மாபாவநூல் பலகற்குமே மறைபன்னுவா தியர்தம்மினும்
ஓபரவியே னிவைநின்முனே யுரைசெய்தனன் விரைசெய்தபூ
நாபாபரா பரனேயரீ நாராயணா நாராயணா.

(இ-ள்) அபத்தம்நிறைந்த என்னுடையவாயானது தேவரீரைவைதுக்கொண்டேயிருக்கும் அடியசர்களுடன் போர் பண்ணிக்கொண்டேயிருக்கும் மகத்தாகியபாபசாஸ்திரங்களையேகற்கும் ஆதலால்வேதத்திலேசொல்லாநின்ற விரோதிகளைப்பார்க்கிலும் அதிகரித்திராநின்றவிரோதியாகியநாயினேன் தேவரீர்சன்னிதானத்திலேவிண்ணப்பஞ்செய்துவிட்டேன் உமதுசித்தம்எனதுபாக்கியம் வாசனைசேர்ந்தநாபிக்கமலபொருந்தாநின்ற பராபரனென்னும் அரியாகிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. (௨௨)

காற்பாலினிற் கடவாதவன் கலிகாலமே திரையாடிடுந்
தோற்பாவைபோ லதுமெச்சவே தொடுசூத்திரத் துரைகாரணீ
மேற்பாவபுண் ணியமானநல் வினைதீவினைக் கெவராகுவார்
நாற்பாலினுக் கொருமூலமே நாராயணா நாராயணா.

(இ-ள்)கடலிலேஉதித்துவாராநின்ற சூரியனாலே அறியும் படியான காலப்பிரமாணத்தோடுங்கூடிய கலிகாலமேதிரையாகவும்ஆடாநின்ற

தோற்பதுமையும் யானுசவும் மனதுமெச்சும்படியாகத் தொடுக்காநி ன்றருத்திரத்துறைக்காரர் தேவரீரானுல்மேலேவராநின்ற பாபபுண் ணியங்களுக்கு அதிகாரிகள் எவராகுவார்கள் இந்த நியாயத்தைதெரி யப்படுத்தவேண்டும் பறப்பன ஊர்வனநடப்பன இருப்பனவாகிய நா ன்குவித சாதிகளுககெல்லாஞ் சமானமான ஆதரவு தேவரீரேயன்றி வேறில்லைஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௧௧)

இரையாலெழுஞ் சுவரானநா னிருசாணுடம் பிடியாமலே
கரையாமலே தகராமலே சழலாமலே யழலாமலே
திரையாமலே வினைமூடிகண் டிறவாமலே வகையென்னைதா
னரையாதசோ றிடுமையனே நாராயணா நாராயணா.

(இ-ள்) ஆகாரத்திலேவளராநின்ற எண்சாணுடம்பாகிய சுவரான து கரைந்துபோகாமலும் இடிந்துபோகாமலும் அதிர்ந்து போகாம லும்வெந்துபோகாமலும் திரைந்துபோகாமலும் வினையினாலேஇறந் துபோய்மறுபடியும்பிறந்துவிழிதிறவாமலும இருக்கும் வகையாதெ னில்நரைதிரைமுப்பில்லாத அமுதத்தைககொடுத்தருளவேண்டும எ ன்னையனுகியஸ்ரீமந்நாராயணா-எ-று. (௧௨)

புற்கொண்டுவாழ் பசுவாரெடார் புலிபாழ்கிணற் றிடைவீழினுங்
கற்கொண்டுவா தடிகொண்டுவா கடிதென்பரப் படுபாவிநான்
எற்கொண்டநோய்க் கெவராகுவா ரினிநீயலா திலையெட்டியும்
கற்கொண்டலால் வளர்கின்றதே நாராயணா நாராயணா.

(இ-ள்)புல்லையுண்டுவாழாநின்றபசுவானதுகிணற்றிலே விழுந்தால் கண்டவர்கள்யாரேனும் எடுத்துவிடுவார்கள் புலியானது விழுந்தா லுல்சீக்கிரமாகக்கற்களும்தடிகளுங்கொண்டு கொல்லுவார்கள் அத்த ன்மைபோலப் படுபாவியான என்னுடைய தேகத்திலே கொண்ட நோயைத் தீர்க்க எவரிருக்கிறார்கள் இனிதேவரீரையன்றி வேறில் லைமழையினாலே எட்டிச்செடியும் வளர்வது போல உம்முடையகிரு பையினாலே அடியேனும்வளரவேண்டும்ஸ்ரீமந்நாராயணா-எ-று.(௧௩)

அரசன்கைபா லபயம்பெறு ரயலானுமன் னரையண்டினல்
விரசென்றுவந் திடமீவர்நீ வினவாதசி விகளண்டினல்
வரசங்கரா தியரஞ்சுவார் வருகென்னமேல்வகையென்னைதான்
நரசிங்கனே முரபங்கனே நாராயணா நாராயணா.

(இ-ள்) தாங்கள்நம்பியிருக்கும் அரசனாலே பிரயோசனமில்லையென்றுமறுமன்னரிடத்திலே சேர்ந்தால்சந்தோஷித்து எதிரேவந்துஇடங்கொடுத்து இரட்சிப்பார்கள் அத்தன்மையாகத் தேவரீரை நம்பினபேர்கள்யாவரேனும் உம்மைவினவாமலவெறுத்துப் பக்கத்திலே சென்றால் முக்கியமானசங்கரன்முதலாகியதேவதைகளானாலும் இரட்சிக்கப்பயப்படுவார்கள் ஆதலால்கதிவேறில்லை அடியேனைவாவென்றழைக்கவகையென்னவெண்ணி யிருக்கிறீரோதெரியாது நரசிங்கரூபனேமுரகாசுரனைக்கொன்றஸ்ரீமன்னாராயணா-எ-று. (௯௪)

கோட்சொல்லுவேன் வசைசொல்லுவேன் குறைசொல்லுவே
ன்முறைசொல்லுவேன், கீட்சொல்லுவேன் மிகைசொல்லுவேன்கி
லி சொல்லுவேன் வலிசொல்லுவேன், சூட்சொல்லுவே னயனூழி
நாள் சொல்வேண்டினுஞ் சிறிதுன்னையோர், நாட்சொல்லவென் ற
றிகின்றிலேன் நாராயணா நாராயணா.

(இ-ள்) பிரமகற்பபரியந்தம் அடியேனுடையநாவானது கோள்களும்வசைகளுங்குறைகளும் முறைகளும் கீழ்மைகளும் குற்றங்களும்பயங்களும்வலிமைகளும்வஞ்சனைகளும் இவைகளைச் சொல்லுமேயனறிகொஞ்சமாகிலுந்தேவரீர்நாமததைஒருநாளையிலேயுஞ் சொல்லும்படியாயறிந்தேனில்லைஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௯௫)

ஆளாகிநின் றிருநாலெழுத் தறியாதநா ளறிவார்களைக்
கேளாதநாள் செவியூறவே கிடையாதநா ளதிலாசையே
மூளாதநா ணிலமீதுதான் முதனாளிலங் கெழுதாதநாள்
நாளாகுமே வாளாயுதா நாராயணா நாராயணா.

(இ-ள்) ஆசாரினுடையதிருவடிகளுக்கு ஆளாகித்தேவரீருடையதிருமந்திரத்தை அறியாதநாளும் தெரிந்தபாகவதரைக்கேளாத நாளும் செவிகளிலேயூறும்படியாய்ப் பொருந்தாதநாளும் அதிலே ஆசையானதுபெருகாதநாளும் அஞ்சாவதுவயதில் முதல் நாளையிலேபள்ளிக்கூடத்தில் அரியென்றுகிலவெழுத்தாகிலும் எழுதிவையாத நாளும்பலபலநாளாகுமோவாளாயுதத்தையுடையஸ்ரீமந்நாராயணா-எ-று. ()

வீட்டுக்குள்ளே துணையாவதும் வெளியிற்குளே துணையாவதும்
கூட்டுக்குளே துணையாவதுங் குன்றுக்குளே துணையாவதும்

காட்டுக்குளே துணையாவதுங் கடலுக்குளே துணையாவதும்
நாட்டுக்குளே துணையாவதும் நாராயணா நாராயணா.

(இ-ள்) வீட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும் வெளியினுக்குள்ளே துணையாயிருப்பவனும் சந்திரனுக்குள்ளே துணையாயிருப்பவனும்மலையினுக்குள்ளே துணையாயிருப்பவனும் காட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும் கடலினுக்குள்ளே துணையாயிருப்பவனும் நாட்டினுக்குள்ளே துணையாயிருப்பவனும் நீயேயன்றி வேறில்லை ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௧௭)

வாங்கின்றதேன் பகையுண்ணலாம் மணக்கின்றசாந் தரையுண்ணலாங்
காய்க்கின்றமா வெறியுண்ணலாங் கறக்கின்றவாக் கட்டுண்ணலாந்
தோய்க்கின்றபால் குடையுண்ணலாஞ்சுவை கெட்டமானிடவாவிலா
நாய்க்கிந்தவிர தனையேனையா நாராயணா நாராயணா

(இ-ள்) தேன்கூட்டினுக்குப்பகைத்தலும் சந்தனக் கட்டையினுக்குத்தேய்த்தலும் பழுத்தமரத்தினுக்குக் கல்லெறிதலும் கறக்கும் பசுவினுக்குக்கயிறணைத்தலும் தோய்த்தயிருனுக்குமத்தாற் குடைதலும் இவைகளுக்கு இந்தவுபத்திரவ முண்டாகில் பிறருக்குபகாரமாகும்உரிசையும்வாலு மில்லாதமாண்டமென்னும் நாயினுக்கு இந்த வாதனையைக்கொடுத்தீரே இதனாலே உமக்கென்னபிரயோசனமுண்டுதெரியச்சொல்லும் ஸ்ரீமந்நாராயணனே-எ-று- (௧௮)

தும்பிக்கையானையுமவர்முன் றுகிலோடிவா டியநங்கையும்
தம்பிக்கையா மகயோகருந் தானிற்கவே சதுர்வேதியன்
கம்பிக்கையா லரனுக்குநீ கனியையமிட் டினியையமேன்
நம்பிக்கையா கியதெய்வமே நாராயணா நாராயணா.

(இ-ள்) கஜேந்திரனையும் பாண்டவரையும் வஸ்திரம் நீங்குதேன் வாடின துரோபதையையும் ஸ்தம்பிதமாயிருந்து தவம்பண்ணுகின்ற மகத்தாகியயோகிகளையும் இரட்சித்ததிருக்கட்டும் நான்குவேதத்தையுமுடைத்தாகிய பிரமனுடைய சிரத்தைக்கிள்ளின சிவனுக்கும் பிட்சையிட்டுச் சாபத்தைத்தீர்த்தபிறபாடும் இனிபரத்துவம வேறே யென்று ஐயப்படலாமோ நம்பிக்கையானதெய்வம் நீயேயன்றி வேறில்லைஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௧௯)

பாலாவதோ தேனாவதோ பழமாவதோ பாகாவதோ
மேலானசர்க்கரையாவதோ விரையாருநல்லமுதாவதோ

கோலாகலப்பிணிதீரவே குளியங்களோவனமூலியோ
நாலாவதோநின்பேர்சொலாய் நாராயணா நாராயணா.

(இ-ள்) அடியேனுடையதேகத்திலே கோலாகலஞ்செய்யாநின்ற நோயைத்தீர்க்கும்படியானதேவரீருடையதிருநாமமானது பாலாகியதோதேனாகியதோ பழமாகியதோ பாலாகியதோ மேலாகியசருக்கரையாகியதோ வாசனைசேர்ந்த நல்லமிர்தமாகியதோவனமூலிகையாகியதோ இவையல்லாமல் மணிமந்திரம்அவிழ்தம் இவை மூன்றுக்குமேலாகியதோஎன்னென்று சொல்லுவோம்ஸ்ரீமந்நாராயணா-எ-று

பூவுக்குநல் லதுசொல்லவோபொலிசீதளப் புதுவாசமே
தேவுக்குநல் லதுசொல்லவோ செவியார்முனேயெதிர்நிற்பதே
ஆவுக்குநல் லதுசொல்லவோ வதுசாதுவா யமுதீவதே
நாவுக்குநல் லதுசொல்லவே நாராயணா நாராயணா.

(இ-ள்)புட்பங்களுக்குள்ளே நல்லது சொல்லவேண்டுமானால் காந்தியுங்குளிர்ச்சியும் புதியவாசனையும் உண்டாகியபுட்பமேயல்லாமல்வேறில்லை தெய்வங்களுக்குள்ளே நல்லதுசொல்ல வேண்டுமானால் முறையத்தைக்காதிலேகேட்குமுன்னமே அடியார்களுக்குப் பிரசன்னமாகிய தெய்வமேயன்றிவேறில்லைபசுக்களுக்குள்ளே நல்லதுசொல்லவேண்டுமானால் அதுவெகுசாதுவாயமுதத்தைக் கொடுக்கும்பசுவேயன்றிவேறில்லை நாவுகளுக்குள்ளே நல்லது சொல்லவேண்டுமானால் தேவரீருடைய திருநாமத்தைச்சொல்லிய நாவேயன்றி வேறில்லைஸ்ரீமந்நாராயணனே-எ-று. (சக)

ஆனந்தமா யழுவார்முனே மலர்சூடியே தொழுவார்முனே
மோனந்தனிற் கரைவார்முனே முகிலென்னவே புகழ்வார்முனே
தானந்தவம் புரிவார்முனே சரணென்றுனை யடைவார்முனே
நானென்செயகே ளிவையொன்றிலே நாராயணா நாராயணா.

(இ-ள்) தேவரீருடையதிருவடியை நினைத்துஆனந்தப் புட்பங்களைக்கண்களிலே பெருவார்களுக்குமுன்னே புட்பங்களையலங்காரஞ்செய்துதண்டஞ்சமர்ப்பிப்பார்களுக்குமுன்னேமௌனத்தியானத்திலே உள்ளங்கரைந்திடுவார்களுக்குமுன்னே பசுங்கொண்டலேயென்றுபுகழ்ந்திடுவார் களுக்குமுன்னே தானங்களுந் தவங்களும் செ

ய்திடுவார்களுக்குமுன்னே சரணாகதிசெய்திடுவார்களுக்கு முன்னே அடியேன் இவைகளிலே ஒன்றுகிலுஞ்செய்யமாட்டுவேனோ ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௪௨)

செரிக்கின்றவூ ணுகர்வேனலேன் சிரிக்கின்றகாரியமேசெய்வேன்
கரிக்கின்றகண் படையேன்வெறுங் கழப்பன்கொடுங் கடுவஞ்சகன்
பரிக்கின்றநின் னடியாரொடும் பழகேனலேன் படர்வந்தபின்
நரிக்கின்றனே னினியென்செய்வே நாராயணா நாராயணா.

(இ-ள்) சீரணமாகும்படியான ஆகாரத்தைக்கொள்ளாமல் நகைக்கும்படியானகாரியமேசெய்து தெரிசனஅபேட்சையான கண்ணையும்படையாமல் அன்பைப்பரிக்கின்ற அடியாருடனேயுங்கூடாமல் விருதாவாகியகழப்பனாகவும் பொல்லாதவிஷம்போலும் வஞ்சகனாகவுமத்தரித்துஅன்பும்வந்தபிற்பாடு அவதியைகொள்ளாநின்ற நாயினேனினியென்செய்வேன்ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௪௩)

ஆதாரதே வதையென்பனோ வடியேனையா ளரசென்பனோ
ஓதாதுணர்ந் திடவன்புகூ ருபதேசதே வென்செய்வனீ
மாதாபிதா வுடலாவிநீ மனைகாணிபொன் வலிசெல்வநீ
நாதாவுநீ தாதாவுநீ நாராயணா நாராயணா.

(இ-ள்) ஆதாரமாகியதேவதையென்பனோ அடியேனையாளுங் கர்த்தனேயென்பனோ பலநூல்களையோதாமல் தன்னிலையறிந்திடஅன்புசெய்யாநின்ற உபதேசகுருவேயென்பனோ என்னென்று சொல்லுவேன்தாயுந்தையுந்தேகமும் உயிரும்பெண்சாதியும்காணியுந்திரவியமும்வலிமையுஞ்செல்வமும் நாதனும்பிரபுவும் நீயேயன்றி வேறில்லைஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௪௪)

வடுநிந்தையே னிடுவந்தியேன் மருள்விஞ்சினே னருளஞ்சினேன்
அடுசிந்தையே னெடுவிந்தையே னலைபண்பினே னுனைநம்பினேன்
விடுதுன்பிலேன் முடுகன்பிலேன் வினைமண்டினே னுனையண்டினே
னடுவொன்றிலே மிடைகுன்றுமோ நாராயணா நாராயணா.

(இ-ள்) குற்றம் பொருந்தியநிந்தையையும் இடுவந்தியையும் மிகுந்தமயக்கத்தையும் அருளில்லாதபொல்லாத இருதயத்தையும்பலவித

துர்நடத்தையையும் காரியமென்கிற அலைச்சலையும்தீவினையையும் இ வைகளைக்கொண்டிராநின்ற நாயினேன் இரக்கத்திலேபயந்தவனாகிய ன்பிலேதுரிதமுள்ளவனாகிய ஒழிவில்லாமல் தேவரீரையடைந்தேன மத்தியிலே இன்னமொருவிதத்தினாலே எனதுவருத்தம நீங்குமோ ஸ்ரீமந்நாராயணா-எ-று. (௪௫)

குடிநீர்கொடீர் முகவேதிடீர் குடவெண்ணெயை வடியீர்பிரம்

படியீர்வெணீ றெறியீர்விழிக் கதிகோரமாஞ் சனமேயிடீர்

கடியீர்வயித் தியரால்வரா கமதாடுதக் குடமிட்டுமே

நடியீரெனிற் பிணியஞ்சுமோ நாராயணா நாராயணா.

(இ-ள்)குடிக்கும்படியாகக்கிஷாயங்கள்நீர்கொடுங்களென்றும்முக த்துக்குவேதுபிடியுங்களென்றும் குடத்திலேயெண்ணெயைக்காய்த் துக்கொடுங்களென்றும் பிரம்புகொண்டடித்துவெளுத்த விபூதியை யெறியுங்களென்றும் கண்களுக்கு அதிகோரமாகிய கலிக்கம் போடு ங்களென்றும் வயித்தியருக்குக்காட்டித் திருங்களென்றும் பக்ஷியு ம் ஆடுங்கோழியும்பலிகொடுத்துச் சன்னதமாட்டிப்பாருங்களென்று ம்சொல்லினால் இவைகளாலே நோய்தீர்வதுண்டோ ஸ்ரீமந்நாரா யணா-எ-று. (௪௬)

பிரம்புக்குமுள் ளிடுதாமரைப் பிணிகட்குநீள் பிணியுற்றவென்

உரம்புக்குளேயறியாததே னுலகத்தெலா முறைசோதிதோல்

வரம்புக்குளே யெலும்புக்குளே வழும்புக்குளே தழும்புக்குளே

நரம்புக்குளே புகவெட்கியோ நாராயணா நாராயணா.

(இ-ள்) முள்ளுகளோடுங்கூடிய பிரப்பம்புதறுகளுக்குந் தாமரை ப்பிணையல்களுக்கு மிகுந்தநோய் கொண்டிராநின்ற என்னுடையநெ ஞ்சுக்குள்ளேநுழைந்தறியாமலிருப்பதென்னஉலகத்திலிருக்கும் எல் லாவுயிர்கள்தோறும்வாசம்பண்ணாநின்றசோதிநீயேயன்றிவேறில்லை ஆதலாலிந்த தோலுடம்பு மெலும்பும்வழும்பும்நிணமும்நரம்பும் இ வைமுதலிய நாற்றமாபடியினாலே புகுந்தறிதலுக்கு வெட்கமாகிய தோஸ்ரீமந்நாராயணா-எ-று. (௪௭)

மன்றாடிய யதிசோபன மழைவண்ணனே விசயங்கரா

வென்றாய்சயஞ் செயமச்சுதா மிகவாழிகே சவனேசுபங்

கன்றாலவில் வெறிந்தாய்பெருங் கலியாணமங் கலமாதவா

நன்றாகவெங் கடநாயகா நாராயணா நாராயணா.

(இ-ள்) கோபிகாஸ்திரீகளுடையசபையிலே நடனம்பண்ணுகின்றவனே உனக்கு அதிகசோபனம் மேகவண்ணனே உனக்குவிசயம் மூதலையைவென்றவனே உனக்குச்செபம்செயம் அச்சுதனே உனக்குமிகுந்தவாழ்கேசவனே உனக்குச்சுபம் கன்றால்விளாங்கனியெறிந்தவனே எனக்குப்பெரிதாகியகலியாணமாதவனே உனக்குமங்களம் வேங்கடநாயகா நீ இத்தன்மையாக நன்றாயிருக்கவேண்டும் ஸ்ரீமந்நாராயணா-என்றவாறு. (சஅ)

இந்தாவென வெனதிச்சைநீ யெளிதிலையே லழிவாகுமோ
சந்தானமா மலராலருச் சனைசெய்குவார் தவிர்வார்களோ
வந்தானபேர் துதியார்களோ வசுதேவர்போற் குறையாகுமோ
நந்தாதபொன் னகைசெய்வளோ நாராயணா நாராயணா.

(இ-ள்) அடியேனுடைய இச்சையானபடியே இந்தாவென்று தேவரீர் எளிதாகப்பலனைக்கொடுத்தருளினால் உமக்கு இகழ்ச்சியாகுமோ கற்பகமலரினாலே அருச்சனைசெய்யாநின்றபேர்கள் தவிர்த்துவிட்டு விடுவார்களோ சந்நிதானத்தில் வந்தபேர்கள் துதியார்களோ வசுதேவருடையஉடைமையிலேகுறைந்துபோகுமோ அழிவில்லாதஸ்ரீமகாலட்சுமி நகைப்பாளோ சொல்லும்ஸ்ரீமந்நாராயணனே-எ-று (ச௯)

சிற்றப்பனே துருவற்குநீ தெகிபாண்டனூர் பெரியப்பனே
கற்றத்தைதேவகிதங்கையோ கண்டாகனன்மிதிலேசனே
சுற்றத்தரோ பெறுவோரெலாந் தொழுவேன்வழங் கிடுவேன்விடேன்
நத்தப்படும் பொருடந்துபோ நாராயணா நாராயணா.

(இ-ள்) தேவரீர்முன்னாளிலே இரட்சித்தபேர்களுக்குள்ளே துருவமகாராஜனுக்குநீசிற்றப்பனோ தெகிபாண்டனென்கிறவன் உமக்குப்பெரியப்பனோ கல்லுருவம்போக்கிக் கிளிபோலப்பேசப்பண்ணுகின்றஅகலிகையானவள் தங்கைக்குத்தங்கையாகிய உமதுசிறியதாயாரோ கண்டாகனனென்னும்விரோதியானவன் உமக்குப்பெண்கொடுத்தமிதிலேச்சனகமகாராசனாகிய அம்மானோ இவ்வண்ணம்பேறுபெற்றபேர்களும்பெறும்பேர்களும் உமக்கு உறவின்முறையார்களோ ஆதலால்சம்பந்தமில்லாதபேரையெல்லாம் இரட்சித்தபடியினாலேதேவரீருக்கும்அடியேனுக்கும்வழக்குவிடுவதில்லை ஆசைப்பட்டபலனைக்கொ

டுத்து அப்புறம்போகவேண்டுமேயன்றி போகக்கூடாது ஸ்ரீமந்நாரா யணா-எ-று. (ரு0)

தன்னெட்டெழுத் தயன்மத்தகந் தனிலேபொறித் தடிநாவிலே
உன்னெட்டெழுத்தெழுதாமையா லுலகத்துளோ ரவனைத்தொழார்
கன்னெட்டிடத் தருநெட்டிடக் கனனெட்டிடக் கனகாவிபின்
நன்னெட்டெலாந் தொடர்யாதனே நாராயணா நாராயணா.

(இ-ள்) பிரமதேவனானவன் உலகத்திலேயுள்ளமானிடர்களுடைய தலைகளிலேதனது கெட்டெழுத்தைமாத்திரம்எழுதி அடிநாவுகளிலே தேவரீருடைய அஷ்டாக்ஷரத்தை எழுதாமற்போனபடியினாலே அவனை ஒருவருந்தேடுகிறதேயில்லை பூலோகத்திலேகல்லுகள் கெட்டிடவும்விருக்ஷங்கள்கெட்டிடவும் அக்கினிகள்கெட்டிடவும்விஸ்தாரமாகிய பசுக்கள்பின்னாலே நன்மைபெறகெடிதானதூரமெல்லாம் நடந்தருளாநின்றதிருவடியையுடைத்தாகிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. (ருக)

ஊரானுக்குமோ ருருவஞ்சமோ வுனைநச்சினே னெனையச்சமன்
விரலிட்டுதேர் வினைவல்லனோ விதைக்குமவ்விரலோசையால்
பொரானுற்றநோய் கழலப்பணாய் புதிதாமருந் தொருதூதனல்
நாலைக்குளாய் வரவேண்டுமோ நாராயணா நாராயணா.

(இ-ள்) குத்தாநின்ற ஊரலினுக்குஒருகாலத்திலேயும் தரித்திரம்வருவதில்லை அத்தன்மைபோலத்தேவரீரிடத்தில் நிரம்பிய ஐசுவரியமேயன்றி இல்லாததில்லையே ஆதலால் உம்மிடத்திலே இச்சைகொண்டேன் இனியென்னை அந்தயமனானவன் விரல்விட்டுக்காட்டியறிந்துவினைசெய்யமாட்டுவனோ பிரமாவினுடையகைகளிலே இராநின்ற விரலும்என்றலைலேஎழுதஅசையமாட்டாது வருத்தத்தைச்செய்யாநின்றநோயைத்திரும்படியாய்ச் செய்வதற்கும்புதிதாய்ஒப்பில்லாதசஞ்சீவியானது ஸ்ரீஅனுமாராலேவரவேண்டுமோ க்ஷீராப்திவாசகனாகிய ஸ்ரீமந்நாராயணா-எ-று. (ருஉ)

சமையாதிதே வதையென்பதுஞ் சமையாதிநின் பெயரென்பதும்
உமையாளுடன் மரமன்பரிந் துனைமாமறைப் பொருளென்பதும்
தமையாள்வதென் றிமையோர்திலோத்தமையாதிபன்புகழ்நின்றதும்
நமையாமலே யெனையாளுவாய் நாராயணா நாராயணா.

(இ-ள்) சமயங்களுக்கெல்லாம் அதிதேவதை நீயேயென்றும் அருசமையத்துக்குஆகியதுஉம்முடையபெயரேயென்றும்மகத்தாகியவே

தப்பொருள்நீயேயென்றும் உமையவளுக்குச் சிவன்பரிந்து நிச்சயம் பண்ணினதும்தேவதைகளுக்கும்திலோர்த்தனமக்கும்அதிபனாகியதே வேந்திரன்தங்களை இரட்சிக்குங்கர்த்தனேயென்றுபுகழ்கின்றதுங்கெ டாமற்படிஎன்னை இரட்சித்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா-எ-று.

நீயாண்டடார லடிபட்டநா ணினைவில்லிநின் றுதரத்துளே
போயண்டகோ டியிலெந்தவூர் புறையிற்குளே விளையாடினேன்
மாயக்கடந் தறிவேனலோ வரதன்கெடீர் வானோர்க்கெலாம்
நாயென்கெடீர் விடுமென்பனே நாராயணா நாராயணா.

(இ-ள்) தேவரீர்அசோதைமுதலாகிய இடையராலே அடிப்பட்ட நாளையிலேயடியேனுக்கு நினைவில்லாமற்போயது அதுஎதனாலேயென்றால்உமதுகுட்சிக்குள்ளே இராநின்றஅண்டகோடிகளிலே எந்தசந்துகளுக்குள்ளேயோவிளையாடினேன் நீர்செய்யும்மாயம் நீங்கியறிந்தேனேயானால் தேவதைகளுக்கெல்லாமும்மைவரதனென்றும்நாயகனென்றும்அந்த இடையர்களுக்குத்தெரியப்படச்சொல்லிக்கெடுவீர்கள்விட்டுவிடுங்கோளென்று நீக்கிவிடுவேன் திருமேனிவென்னமாக நொந்ததோ இப்போதுபெரியோர்களாலே யறிந்தேன் அறிந்துஞ்சமயத்திலே உதவாதேபோனேன் இனிவருந்தி என்னபிரயோசனம் ஸ்ரீமந்நாராயணா-எ-று. (ருச)

காசிக்குளுங் கயையிற்குளுங் கழியாதபாதகனாகையால்
கூசிக்குலைந் துனைவந்தியேன் குறையாகுமோ வினையென்பதோர்
வாசிக்குவந் தருள்செய்குவாம் வயிரத்திரா வணன்றங்கைதன
நாசிக்குவா ளறியையேன நாராயணா நாராயணா.

(இ-ள்) காசியினிடத்திலேயுங் கயாவினிடத்திலேயும் வாசம்பண்ணினாலும் நீங்காதபாவியானபடியினாலே மனது கூசிக்குலைந்துதேவரீரைத் தோத்திரம்பண்ணாமல் விட்டுவிட்டேன் அதினாலேஉமக்குக் குறைவாகுமோஅடியேனுடைய வினையென்னும்வாசிதிரும் படியாய்வந்துகிருபைசெய்தருளவேண்டும் முன்னாளையிலேவயிரத்தோடுங்கூடிய இராவணன்தங்கையாகிய சூர்ப்பநகையினது மூக்கறும்படியாய்செய்தவாளாயுதத்தையுடைய ஸ்ரீமந்நாராயணா-எ-று. (ருரு)

காளுக்கவா வியநாவினுஞ் சலியதுவா சனியானநோய்
ஆளைக்கெடா தின்றைக்குவா வசையாமலே யன்றைக்குவா

தோளுக்குவா வினைசெய்தவன் றுயர்க்கண்டிரா வணனின்றுபோய்
நாளைக்குவா வென்றுமையனே நாராயணா நாராயணா.

(இ-ள்) தேவரீருடையதிருவடிகளுக்குஆசைகொள்ளாநின்ற என துநெஞ்சிலேயும் நாவிலேயும்வருத்தமில்லாமல்வரவேண்டுஞ்சனியா னநோயாளனு அழகுமையைக்கெடுத்துவிடாமல் இன்றைக்கேவர வே ண்டுஞ்சரமதிசையிலேயமனைக்கண்டு சஞ்சலிக்குமுன்னமே அன்றை க்குவரவேண்டும் முன்னாளிலேபாணங்களைத்தோள்களிலேயழுந்து ம்படியாய்எய்து அவனுடைய துயரத்தைக்கண்டு வயிரத்தையுடையராவ ணா நீஇன்றைக்குச்சென்றுநாளைக்குவாவென்று இருப்பைபண்ணுகின்ற என்னையனாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௫௬)

விக்கற்கிடம்பொருமற்கிடம் விடுமூச்சுமேலெழுதற்கிடம்
கக்கற்கிடமிருமற்கிடங் கருகற்கிடம்திருகற்கிடம்
சொக்கற்கிடங்குளிர்தற்கிடஞ் சுடுதற்கிடம்வெருவற்கிடம்
நக்கற்கிடந்தருமையனே நாராயணா நாராயணா.

(இ-ள்) விக்கலென்றும்பொருமலென்றும்மேல்மூச்சென்றும் மக் கலென்றும் இருமலென்றும் கருகலென்றும்திருகலென்றுஞ்சொக் குதலென்றும்குளிர்தலென்றுஞ் சுடுதலென்றும்பயப்படுதலென்றும் நக்கலென்றுஞ் சொல்லாநின்ற அஞ்சுபிணிகளுக்கெல்லாம்இடங்கொ டுத்திராநின்றதேகத்தையுடைத்தாகிய அடியேனை இரட்சித்தருளவே ண்டும் ஸ்ரீமந்நாராயணனே எ-று. (௫௭)

துளசிதளத்துளசிதளத் தூய்நீரேகுடிநீரதாம்
உளதாயிரம்பெயரெண்ணுநூற் றொருகோடிமந்திரமேலதாம்
வளமார்பின்மாமணியென்னவே மணியாமெனைப்பிணியென்செயும்
நளகூபரன்பகைவென்றவா நாராயணா நாராயணா.

(இ-ள்) திருத்துழாயினுது தளங்களிலே பொருந்துங் குளிர்ந்தநீ ரே குடிக்குங்கிஷாயங்களுக்கெல்லாம் மேலாகியகிஷாயநீராகவு ம்நிலைபெற்றிநின்ற ஆயிரந்திருநாமங்களும் நூற்றொருகோடி மந் திரங்களுக்கு மேலாகிய மந்திரமாகவும்வளம்பொருந்தாநின்ற திரு மார்பிலேயிருக்கும் கவுஸ்துவமணியேமணிகளுக்கெல்லாம மேலா

கிய்மணியாகவும் இருக்கின்ற ஆராயுமிடத்தில்இதுவேமணிமந்திரஆவிழ்தமாக விருக்கப்பிணியானது அடியேனையென்னசெய்யும் நளகூபரனுடைய சாபத்தைத்தீர்த்து அருளியஸ்ரீமந்நாராயணா-எ-று. (௩அ)

சுவையோசையூ றொளிமாமணந் தொடருமனஞ் சுழல்கொண்டையுங்
கலைமானுமா னையும்விட்டிலுங் களிவண்டுமே விளிகின்றபோ
லிவைதூயவென் றிவைதீயவென் றிவியுண்டிலே னினியென்செய்வே
னவைதீரவே யருள்செய்குவாய் நாராயணா நாராயணா.

(இ-ள்) ஆகாரவுருசையினாலே கொண்டையும் மணி யோசையினாலேகிளைமானும் தேகபரிசத்தினாலே ஆனையுந் தீபப்பிரகாசத்தினால விட்டிற்பூச்சியும் வாசனையினாலே மதத்தவண்டும் இவையைந்தும் மனந்தொடர்ந்து சுழன்றுவிழுந்திறந்து போவதுபோலஎனது பஞ்சஇந்திரியமும் இதுநன்மையென்றும் இதுதீமையென்றும் தெரிந்து புசிப்பதில்லை இனியென்செய்கேன் இந்தக்குற்றந்தீருமபடியாய்க் கிருபைசெய்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணா-எ-று. (௩௯)

நெட்டேணியின் படியெட்டுமோ நின்னெட்டெழுத் தொழிலன்றமே
எட்டாமெனும் பதமெட்டவே யிரதித்தசர்க் கரையேயதின்
வட்டேபசும் பழமேசதா மதுரித்தவா ரமுதேயெனுள்
நட்டேயருட் புனல்கட்டுவாய் நாராயணா நாராயணா.

(இ-ள்) மூங்கில்களாலே நெடிதாயமைத்திராநின்ற ஏணியினது படிகளிலேயேறினால் பரமபதம்எட்டமாட்டாது ஆதலால்ஏழு ஆபரணத்தோடுங்கூடிய அண்டத்துக்குமேலே எட்டாவதாகியஅந்தப்பரமபதத்துக்கு ஏறிவர உபாயமுண்டு அதுயாதெனில் நினது திருமந்திரமாகிய எட்டெழுத்தையும் எனதுநெஞ்சிலேநட்டு இரம்மியமானசர்க்கரையுங் கற்கண்டும் கனித்தமுப்பழமும் நித்தியமதுரமாகிய ஆராவமிர்தமு மிவைகளுடைய சுவைபோல பரவும்படியாகக்கிருபைப்புனல்கட்டினால்ஏறிவருவேன் ஸ்ரீமந்நாராயணா-எ-று. (௪௰)

காணுங்கணே குவியுங்கையே கருதுள்ளமே கனலாஞ்சனம்
பூணும்புயம் புளகாங்கமே புகழ்நாவதே திகழ்கேள்வியே

ஆணும்பெணுஞ் சரணென்பதேயவையல்லனு னபராதிகாண்
நாணும்பெயர்க் காதாரமே நாராயணா நாராயணா.

(இ-ள்) தேவரீர் திருவடியைக்காணாநின்றகண்களும் குவியாநின்றகைகளும் நினையாநின்றஉள்ளங்களும் மந்திராக்ஷிபொருந்திய சங்குசக்ர வாஞ்சனம் பூணாநின்ற புசங்களும் புளகம்கொள்ளாநின்றதேகங்களும் புகழாநின்றநாவுகளும் கேட்காநின்றசெவிகளும் இவைகள் பொருந்திக்குடும்பத்துடனேசரணாகதிபண்ணாநின்றஅடியார்களைப்போலப்பொருந்தினவனானல்ல மிகுந்த அபராதத்தையுடையவன் ஆதலால் தரிசனம்பண்ண வெட்கத்தையடைந்தேன் இத்தன்மையாம் வெட்கத்தையடைந்தபேர்களுக்கெல்லா மாதாரமாகிய ஸ்ரீமந்நாராயணனே-று. ()

கவிநல்லதோ கவிதீயதோ கனமூடனான் விதைவித்திடும்
புவிநல்லதேல் விளையெய்துமே புகழ்நல்லதேல் புகர்கேட்கவென்
செவிநல்லதே லருணல்லதே செயனல்லதே லியனல்லதே
நவிநல்லதே வரினாவிலே நாராயணா நாராயணா.

(இ-ள்) மிகுந்தமூடனானவன் பாடாநின்ற கவிதையானது நன்மை யாயதோ தீமையாயதோதெரியவராது விதைக்காநின்ற விதையானது பூமிநல்லதானபடியினாலே விளையுமேயன்றி விளையாமற்போவதில்லை ஆதலாலுமது புகழுங்கிருபையுஞ் செயலும் இயலும் நல்லதானபடியினாலே அதையென்காதிலேகேட்டு நாவினாலேதோத்திரம்பண்ணினால் நன்மைவருமேயன்றித் துன்பம்வருவதில்லை ஸ்ரீமந்நாராயணனே-று. ()

பசைகொண்டபா கவதாகமம் பருகாதுகா துருகாதுநெஞ்
சசைகொண்டபா தகநீரிலே யமிழ்வேளையா ணவமாதியாம்
சுசைகொண்டமோ துகைதாக்குமோ களவுள்ளநா னுனதன்பிலேன்
நசைகொண்டகா ரியமாகுமோ நாராயணா நாராயணா.

(இ-ள்) தேவரீரிடத்திலே அன்புபொருந்தாநின்ற பாகவதாள் சொல்லிய ஆகமசாஸ்திரங்களை எனது காதானது கேட்பதுமில்லை நெஞ்சானது உருகுவதுமில்லை அலையாநின்ற பாதகக்கடலிலேவிழுந்த என்னைக்காமம் வெகுளிமயக்கமென்கிற பிரமை யெடுத்துக்கொண்டு வினையானது மோதியடிக்கசெய்யுந்திருட்டுமனத்தை யுடைத்தானவனையும்

டத்திலே பத்தியில்லாமல் பரமபதத்துக்குக் காதல்கொண்டதால்அந்தக் காரிடமாகுமோ ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௬௩)

பலகூறுபட் டொருநெஞ்சினன் பரிசென்னவெங் கணுமானவா
விலைகூறுகொண் டெனைவிண்டதென் விரலூக்கிமோர் நுகர்வார்களோர்
மலகூறலாய் நீதானுமென் மதின்தன்னைவிட் டென்னையொத்தனை
நலகூறுவார் சுரதேனுவே நாராயணா நாராயணா.

(இ-ள்) அடியேன்பலவிதமானஇடையூறுபட்ட ஒருநெஞ்சையுடையவனானேன் தேவரீர்வாய்வுபரிசம்போலேயெங்கும்நிறைந்தவரானீர்ஆதலாலென்னைமாத்திரம்நீங்கும்படியானகுற்றத்தைத்தேடிவிட்டதென்னோ விரல்நீக்கிமோரைக்குடிக்கிற பேர்களுமுளரோ கிருபையுற்றுப்பெருகிய உண்மையான இருதயத்திலே என்னைமறந்துவிட்டபடியினாலே தேவரீரும் அடியேனுஞ்சமானமேயன்றி அதிசயமில்லை நன்மையாகத்தோத்திரம்பண்ணுகின்ற தேவர்களுக்குக்காமதேனுவாகிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௬௪)

வாஞ்சித்ததே வதையாகுநீ வடவேங்கடந் தனிநிற்கவும்
நீஞ்சித்திரிந் தனன்விண்ணிலே நிழல்கண்டபின் வெயினிற்பரோ
காஞ்சித்தலத் தருளாளனே கனகோபுரக் கொடியாடுமொன்
நாஞ்சிற்றிருப் பதிவள்ளலே நாராயணா நாராயணா.

(இ-ள்) அடியேனுடைய நெஞ்சிலே ஆசைகொள்ளாநின்ற தெய்வமாகிய தேவரீரிந்தத் திருவேங்கடத்திலேதானே யெழுந்தருளியிருப்பது தெரியாமல் விண்ணிலேயுலகமெல்லாந்திரிந்தலைந்தேன் இனிநிழல்கண்டபேர்கள் வெயிலிலே நிற்பதுண்டோ கனம்பொருந்திய கோபுரங்களிலே கொடிகளாடாநின்ற அழகியமதில்களோடுங்கூடிய காஞ்சித்தலமுதலாகிய நூற்றெட்டுத் திருப்பதிகளிலேயும் அருளாளனென்றும் வள்ளலென்றும் விளங்கிய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௬௫)

மைநாகமா ழியையண்டிவாழ் வகையென்னநின் னருள்வெள்ளவாஞ்
சையினாலிருந் ததிலூறவே சமைவேனுறத் தருமாறெவன்
கையினாலரிந் திடரண்ணிய கலிதீரநீ யருள்செய்திடும்
நஞரினிற் சரியாவனே நாராயணா நாராயணா.

(இ-ள்) மைநாகமலையானது சமுத்திரத்திலே முழுகிவாழுந் தன்மைபோலே தேவரீருடைய கிருபாசமுத்திரத்திலே ஆசையாயிருந்து ஊ அம்படியாய்ப்பொருந்தின எனக்குக்கொடுக்கும்படியான மார்க்கம் எவ்விடத்திலேயோ தெரியவராது பிர்மாவினுடையசிரத்தைக்கிள்ளிப்பொருந்தாநின்ற தரித்திரம்தீரும்படியாய்த் தேவரீர் கிருபை பண்ணுநின்ற ருத்திரனுக்குச்சமானமாகமாட்டுவேனோ ஸ்ரீமந்நாராயணனே-எ-று. ()

எமக்கென்றுவாழ் குடும்பத்திலே யிழுப்புண்ணுவா ரெமதாணையர்
தமக்கொன்றவைத் திலரென்பரோ சழக்குள்ளபேர் வழக்குள்ளபேர்
சுமக்கின்றவச் சுமையாளனைச் சுதன்மற்றையச் சுமைகட்கெலாம்
நமக்கென்னகா ரியமென்பரோ நாராயணா நாராயணா.

(இ-ள்) எங்களுக்கென்று வாழாநின்றகுடும்பத்திலே ஆவதிப்படும்பேர்கள்நம்முடைய ஆவதிதீரும்படியாய் நம்முடையபிதாக்கள் நமக்கு ஒன்றையும் வையாமற்போனார்களேஎன்று பாவிகள் அழுவார்கள் இந்தச்சம்சாரமாகிய சுமையைச்சுமக்காநின்றபுருஷன் அச்சுதனிருக்கையாலே அந்தச்சுமைகளைத்தாங்க நமக்கென்ன காரியமென்று அறிவாளர்சந்தோஷிப்பார் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (கூஎ)

பசுகட்குமா யினைபாடியிற் பலபாடியா டியுமாயர்தம்
சிசுகட்குமா யினைமைந்தனாத் திருட்டுக்குமா யினையன்றுதான்
மூசுகட்குமா யினைநாயினேன் முசிப்பிக்குமா யருள்பூணவே
நசுக்கியபின்வா சனைகொள்வரோ நாராயணா நாராயணா.

(இ-ள்) ஆயர்பாடியிலேயிராநின்ற பசுக்கூட்டங்களுக்கு இரக்ஷிக்கக்கர்த்தாவாகியும் இடைப்பிள்ளைகளுக்குப் பாலுடனே ஆடல்காட்டிய ஞ்சிறுபிள்ளையாகிவெண்ணெய்திருடும்தொழிலுக்குஇசைந்ததுமல்லாமல் முன்னாளையிலே குரங்குகளுக்கு நேசமாகி இரக்ஷித்ததேவரீர்நாயினேனுடைய தளர்ச்சிக்குக் கிருபைபண்ணுமல் புட்பத்தை நசுக்கிமுகர்வாரைப்போலஉபேக்ஷைபண்ணலாமா ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (

குலங்காணவே குடிகாணவே குணங்காணவே பழுதாயினும்
பலங்காணுநின் னடியாரெனிற் பவசாகரப்பாரப்பெண்ணுளங்

கலங்காமலே கலங்காணுமே கழலாமலே கழல்காணுமே
நலங்காமலே நலங்காணுமே நாராயணா நாராயணா,

(இ-ள்) குலவண்மையும் குலத்தின்றிமையும் குணப்பெருமையும் இவைகளைக் காணுமிடத்தில் பழுதாயிருந்தாலும்தேவரீருக்கு அடிமை பட்டார்களேயானால் மேன்மை பெறுவார்கள் ஆதலால் பாவசமுத்திரப் பரப்புக்குள்ளே என்னுடைய நெஞ்சமானது கலங்கிழுதுங்கி நலங்காமல் நலங்காணும்படியாய்க் கப்பலைப்போல திருவடிகாட்டவேண்டும் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௬௯)

ஈன்றோனுநீ யலனானுமம் மியலுந்தியண் டினனல்லனிற்
போன்றோனெவன் பெறுபிள்ளையைப் போபோபிதா வினவாதிரான்
சான்றோர்முனே யிணிநோயைநீ தவிராயெனிற் சபதங்கெடும்
நான்றோளாவீ சியவாளனே நாராயணா நாராயணா.

(இ-ள்) என்னைப் பெற்றவனும் நீயல்லவோ நானும் அருமையான இயல்பொருந்திய உமதுஉந்தியிலே இருந்தானுமல்லவோ உம்மைப்போல எவரிருக்கிறார்கள் போபோ பிதாவானவன் பெற்றபிள்ளையை வினவாதிருப்பானோ பெரியோர்கள்முன்பாக என்னுடைய நோயைஇனிதீராமற் போனீரானல் உமதுசரணாகதிசம்ரட்சணையென்கிற நெறிகெட்டுப்போகும் பகைஞரைவீசிய வாளாயுதத்தை யுடைத்தாகிய ஸ்ரீமன்னாராயணனே-எ-று. (௭௦)

கஞ்சப்பதந் தனையங்கனே கட்டிக்கரைந் தவசத்தராய்
நெஞ்சத்தையாரணவென் றுதா லிபமித்துநித் திரைகொள்ளுவார்
கொஞ்சத்தைநின் மளவாக்குவாய் துணபத்தையாழ் குடபாக்குவாய்
நஞ்சத்தையாமுதாக்குவாய் நாராயணா நாராயணா.

(இ-ள்) தேவரீருடைய தாமரைபோலும் திருவடியை யுள்ளத்திலே நினைந்து ஞானக்கயிற்றினாலேஅங்ஙனே கட்டிக்கரைந்துருகிப்பரவசத்தை யடைந்து ஸ்ரீமந் நாராயணனேயென்று நிச்சயம்பண்ணி ஆனந்த நித்திரைகொள்ளுவார்களை துரும்புபோலேயிருந்தாலும் அவர்களை மகாமேருவாகச்செய்தருளுவாய் இதுவுமல்லாமல் புழுக்களை அயிஸ்வரியத்தை யுடைத்தாகியகுடும்பங்களாகவும் விஷத்தையமிர்தமாகவுஞ் செய்தருளாநின்ற மகிமையுடையஸ்ரீமந்நாராயணனே எ-று. (௭௧)

ஏழுநெட்டிருஞ் பெருமேனிவந் தென்னைக்காக்கப் படுமென் றுநான்
தழுவிக்கொளத் திகைக்கின்றவென் சகலச்சரா சரமாகுநீ
வழுவிக்கொடங் கிங்கோடியே வரங்கொடுக்க முன் வரவஞ்சியே
நழுவிக்கொடே திரிகின்றதென் நாராயணா நாராயணா.

(இ-ள்) நெடியதாய் வளர்ந்திரா நின்ற உமது உருத்த திருமேனியானது என்னைக்குள்ளே வந்து காக்கப்படுமென்று நான் தழுவிக்கொள்ளத் திரிந்திட்டால் சகலசராசரங்களாகிய தேவரீர் என் முன்னே வந்து வரத்தைக்கொடுக்கப் பயந்தோ அங்குமிங்குமோடி வழுவிக்கொண்டும் நழுவிக்கொண்டும் திரிகின்றதென் சொல்லும் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (எஉ)

எனைக்காக்கநீ வரமேன்மையென் றிருப்பாய்பராக் கருதுண்டுநின்
றனைக்காத்தவா கனமில்லையோ தருசேனைகா வலனில்லையோ
உனைக்காத்தசே டனுமில்லையோ நினைவில்லையோ விமையோர்பிரான்
நினைக்காத்தமா ருதியில்லையோ நாராயணா நாராயணா.

(இ-ள்) அடியேனை இரட்சிக்கவருதல் மேன்மையென் றெண்ணியிருப்பீர் இருக்குமெண்ணத்தில் பராக்குவந்ததோ அல்லது தேவரீருக்குவாகனமாகவும் ஆலையாகவும் காத்துக்கொண்டிராநின்ற கருடனுஞ் சேனைக்காவலனும் ஆதிசேஷனும் தேவர்களாகிய வானவர்களுயிரை இரட்சிக்கச் சஞ்சீவிகொண்டுவந்த அனுமானாகிய இவர்களில்லாமற் போனார்களோ அல்லது திருவுள்ளத்தில் ஞாபகமில்லையோ சொல்லும் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (எ௩)

கண்பொன்றுகோ மகன்மாற்றவன் கடுகொத்தபொய்க் கிருள்பார்த்த
தோர், பண்பொன்றுநூ லுரைசெய்யநான் பலபொய்ச்சொலால் விளை
யாடினேன், மண்பொன்றுநீ ரனல்பொன்றுவிண் வளிபொன்றவேவருமு
ன்றுமின், நண்பொன்றுநீ தரல்வேண்டுமோ நாராயணா நாராயணா.

(இ-ள்) கண்பார்வைபோன திருதராட்டிரன்குமாரனாகிய துரியோதனனுக்குப்பகைவனான தர்மராசன் கடுகளவு பொய்சொன்னதினாலே இருள்சூழ்ந்த நரகத்தைப்பார்த்தானென்றும் ஒப்பில்லாத பண்புபொருந்துஞ் சாஸ்திரஞ் சொல்லச் சேயும் அனேகமான பொய்களை விளையாட்டாகச் சொல்லினேன் ஆதலால் எனக்கென்னகதியோ தெரியவராது பிருதிவி அப்புதேயுவாயு ஆகாயம் இந்தப்பஞ்சபூதங்களுந் தேவர் குட்சியில் அட-

க்குங்காலத்திலே அடியேனும்வந்துசேருவேன் அப்போதாகிலும்உமது கண்பொன்றுமாத்திரம்வைத்து இரட்சித்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (எச)

போகேந்திரன் சிரமேந்துநின் பூதேவி புல்லனையேந்தவே
ஆகேனென்று வுரைசெய்வளே லடியேனையேந் துகைவேண்டுவாய்
மாகேந்திரன் றனதம்பியே வடவேங்கடாசலவள்ளலே
நாகேந்திரியே ககமேர்தியே நாராயணா நாராயணா.

(இ-ள்) சாப்பங்களுக்கு இராசனாகிய ஆதிசேஷன்முடிகளிலேயேந்தாநின்ற உமதுதேவியாகிய பூமிதேவியானவள் பாபிகளைத்தாங்குகற்கு வருத்தமாயிருக்குதென்று தேவரீருடைய திருச்செவியிலே விண்ணப்பஞ்செய்தருள்வாள் ஆதலால் அடியேனைமாத்திரம் தாங்கிக்கொள்ளும்படி ரொய்வேண்டிக்கொள்ள வேண்டும் தேவேந்திரனுக்குத் தம்பியாகவும் திருவேங்கடமலைக்கு நாயகனாகவும்பொருந்திப் பாஞ்சசன்னியத்தையுங் கோவர்த்தனகிரியையுமேந்தி யருளாநின்ற ஸ்ரீமந்நாராயணனே-எ-று.

ஊழிற்பிறந் திடுபாவனே யுடலைத்தொடா வகைதந்திடாய்
வாழிக்குநா யகனிந்திரன் மனுவின்பதம் பெறவிச்சியேன்
ஆழிக்கையுண் கொடைமிக்கதென் றடியேன்மிகப் பெறலாகுமோ
நாழிக்குடங் கலங்கொள்ளுமோ நாராயணா நாராயணா.

(இ-ள்) இகலத்திலே மனுச்சக்கிரவர்த்தியினுடைய பதமும் பரத்திலேவாழ்வுக்குநாயகனாகிய இந்திரனுடையபதமும் இச்சையாகவேண்டுவதேயில்லை ஆகையால்ஊழ்வினையினாலே பிறந்திடாநின்ற பாவநோயானது அடியேனுடைய தேகத்திலே சேராவகைசெய்தருளிப் பரமபதத்தைத் தேவரீகடாட்சித்தருளவேண்டும்திருவாழிதரித்ததிருக் கரத்தையுடையவனே உம்மிடத்திலே மிகுந்ததியாக முண்டென்று நானிச்சைகொண்டதினாலே மிகுந்துவருமோ என்பிராப்தி யெவ்வளவோ அவ்வளவே மூடியும் அதுவுமெயத்தன்மையெனில் நாழிக்குடைத்தைக் கொண்டுபோய்ச் சமுத்திரத்திலே யமிழ்த்தினால்நாழி கொள்ளுமேயன்றிக் கலங்கொள்ளுவதில்லை ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (எரு)

தனுவுக்குளே யுளராறுபேர் சலிகைக்குநா யகரூன்னைநான்
பனுவற்சொலா வகைதட்டுவார் பழகிச்சதா நெறிகட்டுவார்.

அறுவற்றசோரனைவெற்றியே யடியேனையாளசெய்ன்னவே
நனுகிக்கொடே திரிகின்றனன் நாரயணா நாரயணா.

(இ-ள்) என்னுடையதேகத்துக்குள்ளே இராநின்றகாமம் குரோதம் லோபம் மோகம்மதம்மாற்சரியம் என்றுசொல்லாநின்ற இந்தஆறு குற்றங்களும் சகிக்கைக்குநாயகராய் நித்தியமும் பழகித்தேவரீரைஎன்னை சம்மிடகவிதைகளாலே பாடாதவகை தொடுப்பதுமல்லாமல் நன்மார்க்கத்தையும் கொடுக்காநின்ற கிரமம்நீக்கிய திருடர்களைக்கொன்று அடியேனை இரட்சித்தருளும் கர்த்தனேயென்று அடுத்துக்கொண்டுதிரிகின்றனன் ஸ்ரீமந்நாராயணனே-எ-று, (எஎ)

உடைச்சேலைதா குழைக்கோலைதா வுணர்சோறுதா பணப்பேறுதா
கடைப்பூவடா வடைக்காயடா கறிக்காசடா கடைக்கோளனே
இடைக்கோடிவா முடிச்சேதடா இறுயாவையார் வெறுப்பார்பொலா
நடைக்காசையா யிறுத்தேனலோ நாரயணா நாரயணா,

(இ-ள்) உடுக்கிறதற்குச் சேலைதாடாவென்றுங் காதுக்குப் பொன்னோலைதாடாவென்று உண்கிறதற்குச்சோறுதாடாவென்றும் மிகுந்தபணங்களைத்தாடாவென்றும் கடைப்புஷ்பங்களை வாங்கித்தாடா வென்றும் பாக்குவெற்றிலைதாடாவென்றும் கறிக்குக்காசுதாடாவென்றும் கடைப்பட்டகோளனேயென்றும் படுக்கைக்குஓடிவாடாவேன்றும் அடிச்சோனிலே முடிச்சேதடாவென்றும இறுதாதப்பேசிவெறுத்துக்கொள்ளாநின்ற வேசியருடைய பொல்லாதநடத்தைகளில் ஆசையாய்த் திரவியத்தையெல்லாம் இழந்துவிட்டுவிழலானேன்ஸ்ரீமந்நாரயணனே-எ-று,()

கன்னிப்பெருங் கடலோடுவான் கம்பத்திலே விளையாடுவான்
உன்னிக்கொளும் பயமென்னநோ யொருமட்டுநெஞ் சொருமிக்கிலேன்
என்னிற்பயந் தெளிவித்திடா யெல்லோர்க்குமீந் தென்மட்டிலே
நன்னிக்குணம் பிடிபட்டதே நாரயணா நாரயணா,

(இ-ள்) பெரிதாகியகடலிலே நீந்தவும் கம்பத்திலேறி விளையாடவும் பொருந்திய இளம் புத்தியை யுடையவன் சென்ற பிற்பாடு நினைத்துக் கொள்ளாநின்ற பயங்களைப்போலே நோயானது வருந்தியும் எனதுநெஞ்சமொரு மித்த தில்லை என்னிடத்திலே உண்டாகிய

பயத்தைத் தெளிவித்தருளவேண்டும் யாவருக்குங்கிருபைசெய்கிற நீரெ ன்மட்டுஞ்செய்தருள உமக்குலோபகுணம் பிடிபட்டதோ ஸ்ரீமந்நாரா யணனே-எ-று. (எகூ)

புட்புள்ளவன் கொடியென்னவே பொற்பொன்னவன் கலையென்னவே
கப்புண்டரீ கமலத்தினேர் கண்ணென்னவே கரைகின்றிலேன்
சட்புள்ளவன் சமயத்திலே சலமண்டினேன் சரணண்டினேன்
கட்புள்ளதோ பகையுள்ளதோ நாராயணா நாராயணா.

(இ-ள்) பட்சிரூபமாகிய கருடக்கொடியோனே யென்றும் வண்மை பெற்ற சுவர்னவஸ்திரனேயென்றுந்தேனுடகூடிய சிவந்த தாமரைக்க ண்ணனேயென்றுங் கரைந்துருகாத பாவியானவன் உமதுசமயத்திலே வயிராக்கியம்பொருந்தித் திருவடியடைந்தேன் அடியேனிடத்திலேநேச மோபகையிருக்குமோ தெரியவராதுஸ்ரீமந்நாராயணனே-எ-று. (அய)

கச்சுப்பிதிர்ந் தெழுகொங்கையர் கடைவாள்விழிப் படைகோடிகள்
தச்சுக்கிடந் திடுநெஞ்சிலே தணியம்புதைத் தவருய்வரோ
பிச்சுத்தயா பரனுனநீ பெருமந்திரந் தனிலாற்றுவாய்
நச்சுப்பெருஞ் சுதைவேலையாய் நாராயணா நாராயணா.

(இ-ள்) கச்சடங்காமலெழுந்தகொங்கைகளையுடையகன்னியர்கடை க்கண்பார்வையாகிய ஆயுதகோடிகள் எனதுநெஞ்சிலேதைத்துருவிப்பு ண்ணுகியது அந்தநோயை என்சொல்வேன் ஒருபாணம்பட்டவர்கள்பி ழைப்பதில்லையே ஆதலால் நித்தியபரனுகையினலே இந்தப் பாணங்க ளைப்பிடுங்கிப் புண்களை உமதுபெரிதாகிய திருமந்திரத்தினலே ஆறும் படிசெய்தருளவேண்டும் ஆசையுடனேஉயர்ந்த அமுதக்கடலிலேமேவு ம் ஸ்ரீமந்நாராயணனே எ.று. (அக)

எய்தாரிருந் திடவம்பைநோ மிழிவாளர்போற் பழிபாதகம்
செய்தாரிருந் திடலன்றியே தெய்வந்தனைச் சிதைவாகவே
வைதாவதென் விதனத்திலே வழிதப்புமே வ: ய்யாறுமே
மைதாதுவின் பரகாரனே நாராயணா நாராயணா.

(இ-ள்) பாணத்தை யெய்தவனிருக்க அம்பைநோகின்றஇழிவா ளர்போலே பழிபாதகஞ்செய்த நானல்லவோ அனுபவிக்கவேண்டும் அ துவன்றித்தேவரீரை விதனத்திலே கெடுதலாகவைதென்னபிரயோசன

மென்றால் நன்மார்க்கமுந்நசத்தியமுங் கெட்டுப்போகுமேயன்றி வேறி ல்லை சாமதினையினாலே நைந்துபோகாநின்ற தாதுவுக்குவயித்தியனாகி ய ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௮௨)

முகிலுக்குளேயடிபட்டுவோர் முதுமக்கள்போற் றுணிவிக்குமோ
மிகலற்பமோ விவித்திடாய் விமலத்திநீர் மடுவுக்குளே
துகிலைக்கொடாய் துகில்விட்டிடாய் தொழுவெட்கமே வியமைக்கணார்
நகிலுக்குள்வீழ் நகையச்சுதா நாராயணா நாராயணா.

(இ-ள்) மேகவருஷத்தி லடிபட்ட கிழவர்கள் வருத்தத்தை யடைந்து இறக்குமாப்போலே அடியேனிறக்கும்படியாய்த் துணிந்து செய்யாநின்ற நோயானது பெருகுதல் சொற்பமல்லவே ஆதலாலது நீங்கும்படிக்குக் காட்சித்தருளவேண்டும்முன்னாளையிலே பரிசுத்தமானசலத்தோடுங்கூடிய யமுனாநதியிலே ஸ்நானம்பண்ணாநின்ற கோபஸ்திரீகளுடைய வஸ்திரங்களை அபகரித்துக்கொண்டுபோய்க் கொடாமலும் விட்டுவிடாமலும் நின்றகாலத்திலே அவர்களும்மைத்தொழுது கேட்க வெட்கத்தையுடையவர்களாய் மைதீட்டிகண்பார்வையர்ணது தங்கள்கொங்கையிலே படிவத்தக்கதாய்த் தலையைக்கவிழ்ந்துகொள்ள நகைத்தருளாநின்ற ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௮௩)

கமலத்தைவர் தயல்வண்டுணுங் கருகாததே னகளொக்கவே
அமலத்தநீ ரிடைவாழினு மதுபோலவே யயலாரெலாம்
நிமலப்பதந் தொழுமூரிலே நிலைபெற்றிருந் துனைவந்தியேன்
ஞமலிக்குமோ ரருள்செய்திடு நாராயணா நாராயணா.

(இ-ள்) பரிசுத்தமான சலத்தோடுங்கூடிய தடாகத்திலே இராநின்ற தாமரையினுடைய பெருமையை யத்துடனேபிறந்த தவளையறியமாட்டாதுபக்கங்களிலேயிருந்துவண்டுகளதின்தேனைச்சாப்பிட்டுச் சந்தோஷத்தையடையுமாப்போலே தேவரீர் நிலைபெற்றிராநின்ற ஊரிலே அடியேனிருந்தும் தேவரீரைத்தோத்திரம்பண்ணிக்கடைத்தேறவறியேன் அயலிலே இராநின்ற பிரமாமுதலாகிய பேர்களெல்லாந் தேவரீருடைய பரிசுத்தமான திருவடியைத்தொழுது கடைத்தேறுகிறார்கள் கடைகெட்ட சுவானத்துக்கும் கிருபைசெய்தருளின ஸ்ரீமந்நாராயணனே எ-று.

என்மாடுவீ டென்பிள்ளைபெண் டென்காணிமண் ணென்சொம்மனு
தாமனவிலே யறியாதபேர் கனதாகுமோ தானவதார்

வின்மாயமென் றதுகண்டுநின் வடவேங்கடப் பதிவைகியே
நன்வானுபர் நிலைநிற்பரே நாராயணா நாராயணா.

(இ-ள்) என்மாடென்று மென்வீடென்று மென்பிள்ளையென்றுமெ ன்பெண்சாதியென்றும் என்காணிமண்ணென்றும் என்னுடைமையென் றும் தங்கள்மயக்கத்தினால்மூடரானபேர்சொந்தமென்றிருப்பார்கள் அ வைகள்தங்கள்வாகுமே அவைகளுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமெ ன்ன இவையெல்லாம் வலியமாய்கையென்று தெளிந்து நன்மைபெற்ற மானிடரெல்லாம் தேவரீருடையதிருமலையைநித்தியபதார்த்தமென்றுநி லைபெறுவார்கள் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௮௫)

பரலோகமும் பரரூபமும் பரபோகமும பரமாயுவும்
சுரலோகமுஞ் சுரரூபமுஞ் சுரபோகமுஞ் சுராயுவும்
திரலோகமென் றிவையாவையு திருவேங்கடந் தனிலுள்ளதால்
நரலோகமே மிகநன்றுக நாராயணா நாராயணா.

(இ-ள்) பரமபதமும் திவ்வியதிருமேனியும் நித்தியானந்தமும் நித்தி யதத்துவமுமற்ற இமையவர்நாடு மிமையவர்மேனியு மிமையவர் ஆயுளு ம் இமையவர்போகமும் இமையவர்களுக்கு நாயகனாகிய இந்திரனுடை யபதவியும் இவைகள்முதலாகிய ஐசுவரியங்களெல்லாந் தமதுதிருவேங் கடத்தையடைந்தபேர்களுக்கெல்லா முண்டாகிய தன்மையினாலே இந் தநரகலோக மிகுந்தநன்மையானது ஸ்ரீமந்நாராயணனே எ று. (௮௬)

அசவாதவன் வழிவேடரா ரடியேனுடம் பிணிமேனியெலாம்
நசவாதுநின் பவர்போலவே நவராமலிங் கருள்கூறுவாய்
குசவாயுதா சிறுகோவலா குறுவேதியா குலமன்னர்மா
னசவாவியிற் பயிலன்னமே நாராயணா நாராயணா.

(இ-ள்) அசைவில்லாமல் வலியபழியைச்செய்யாநின்ற வேடரான வர்கள் தயவில்லாமல் மிருகங்களைக் கொன்று தின்னுமாப்போலே அடி யேனுடைய தேகத்தைப்பிணியானது பிடுங்கித்தின்னாமல்இவ்விடத்திற் கிருபை செய்தருளவேண்டுங் கலப்பையாயுதத்தை யுடையவனே இளை மையாகியகோபாலனே குட்டனாகியவாமனனே சூரியகுல மன்னவனே மானசமடுவிலேவிளையாடாநின்ற அன்னரூபமாகிய ஸ்ரீமந்நாராயணனே.

மன்கூறுமங் கிடிபாதியாண் மிருகங்குறள் பரசாளிகோ
மான்கூரலா யுதனையன்மேல் வருவாசியும் பெருவாசியோ

தேன்கூறுமா கம்சாரமுஞ் சிறுபோகமோ கம்சாரமும்
நான்கூறுமங் குருபத்தனே நாராயணா நாராயணா

(இ-ள்) மச்சமென்றும் கூர்மமென்றும் வராகமென்றும் நரசிங்க மென்றும் வாமனனென்றும் பரசுராமனென்றும் ஸ்ரீராமனென்றும் பல ராமனென்றும் ஸ்ரீகிருஷ்ணனென்றும் வந்ததல்லாமற் மேலுங்கற்கியா ய்வருவதினாலே உமக்குப்பெரிதாகிய பலனுண்டோ மதுரம்பொருந்தி ய ஆகமசாஸ்திரமுஞ் சிற்றின்பமாகிய கர்மசாரமும் நானகுசாரமும் ஓ துவித்தகுருவாகிய சாந்திபருக்குப்பத்தனாகிய ஸ்ரீமந்நாராயணனே. ()

மிழுக்கத்தகா தெனதாவியின் விளக்கிற்குநின் னருணெய்யிடாய்
பொறுக்கத்தகா ததுமெய்திடல் புழுக்கத்தகா தொருபோரிலே
குறுக்கிட்டபேர் நடுக்கிட்டிடக் குலேவாணனார் திரடோளெலாம்
நறுக்கிக்கைக்கோர் துணைவிட்டவா நாராயணா நாராயணா

(இ-ள்) அவமாகிய எனதுதேகமானது புழுக்கங்கொண்டு பொறுக் கத்தகாமல் இறந்துபோகிறது தகுதியானகாரியமல்லவே ஆதலால்உயி ராகிய விளக்காவது அவிழ்ந்துபோகாமல் தேவரீர்கிருபையாகிய நெய்ய முது பெய்தருளவேண்டும் ஒப்பில்லாதயுத்தமுகத்திலே குறுக்கிட்டசி வன்முதலாகியபேர் நடுக்கங்கொள்ளப் பொல்லாதவாணாசுரனுடையவி ஸ்தாரமான தோள்களையெல்லாஞ் சக்கரத்தினாலேநறுக்கி இரண்டுகை யைமாத்திரம் விட்டருளியஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௯௬)

புன்சொல்லிலே யகப்பட்டதும் போதாமலே யலமேற்றனக்
கென்சொல்லுவோ மெனவெண்ணியோ யாதோவெனக் கியாதுநீ
தென்சொல்லிலே வடசொல்லிலே திருவாய்மொழிச் சதுர்வேதமா
நன்சொல்லிலே விளையாடுவாய் நாராயணா நாராயணா.

(இ-ள்) அடியேனுடைய மூடபுத்தியினாலே பாடாநின்றநடல்லியாகி ய கவிதைச்சொல்லிலே அகப்பட்டதும்போதாமல் எனது அக்கியானத் தையெல்லாம்ஏற்றபடியினாலேஇவனுக்குஎன்னசொல்லுவோமென்று தி ருவுள்ளத்திலேயெண்ணியதோஎன்னமோ கிருபைசெய்தருளாமலிருப் பதை அறிகிலேன் தமிழாகிய தென்சொல்லிலேயுங் கிரந்தமாகிய வட சொல்லிலேயுந் திருவாய்மொழியென்னும் நான்குவேதத்தினுடைய நன் மைபெற்றசொல்லிலேயுந் திருவிளையாடல் செய்தருளாநின்ற ஸ்ரீமந்நா ராயணனே-எ-று. (௯௦)

மெலியாமையுந் திருஞானமு மிகுயோகமுந் திடதேகமும்
சலியாமையும் பகைநாசமுந் தனராசியுந் தகுசீலமும்
கலியாணமும் பெறநீதரக் கடனாளியாம் பினுமுன்னைநான்
நலியாமலே யருள்கூருவாய் நாராயணா நாராயணா.

(இ-ள்) மெலிதலில்லாமையும் அழகியஞானமும் மிகுந்தயோகமும் வலியதேகமும் சலியாமையும்பகைநாசமுந் திரவியராசியும் யோக்கியமான ஆசாரமுங் கலியாணம்இவையெல்லாந் தேவரீரிடத்தில் பெறும்படியான கடன்காரனானதலால் இனிஉம்மைநான்வருந்தாமல்பூரணமாகக்கிருபைசெய்தருளவேண்டும்ஸ்ரீமந் நாராயணனே-எ-று.

சமர்த்தேதுநல் லறமேதருந் தயையேதருந் தவமேதுமிக்
கமைத்தேதுமே லடைவேதுகா ரணமேதுபூ ரணமேதுசங்
கமத்தேதுரா கதமேதுசொல் கமையேதுசொல் சரியாவுநீ
நமத்தேதுவா ரகைவாசனே நாராயணா நாராயணா.

(இ-ள்) சாமார்த்தியங்கள்தானேது நல்லதருமங்கள்தானேது அருமையானதயவுகள்தானேது அரியதவங்கள்தானேது மிகுந்த அமைப்புகள்தானேது மேலாகிய அடைவுகள்தானேது காரணங்கள் தானேது பூரணங்கள்தானேது கூட்டங்கள்தானேது ஆணவங்கள் தானேது சொல்லியபெருமைகள்தானேது சொல்லாநின்றமோட்சங்கள்தானேது இவைகள்யாவும் தேவரீருடைய கிருபையேயன்றி வேறில்லை ஆதலாலுமது திருவடிகளுக்கே நமஸ்காரஞ்செய்துநின்றேன் துவாரகாவாசனாகி ஸ்ரீமந் நாராயணனே-எ-று.

(௧௨)

பித்தங்கயஞ் சொரிதேமல்கம் பிதமீளைகா மலைபாணவுன்
மத்தஞ்சுரஞ் சளிசன்னிகால் வலிசூலைவிக் குதல்கக்குவா
யுத்தம்பனந் தலைநோவுமற் றுளநோயெலாந் தொடராமலா
நத்தம்மகற் கொருகாவல நாராயணா நாராயணா.

(இ-ள்) பித்தம் க்ஷயம்சொரிவெள்ளைப்பாண்டு நரைஈளைகாமாலைப் பாண்டு உன்மத்தம்சுரம்சளிசன்னி கால்வலிசூலைவிக்கல் கக்குவாய் தம்பனம் தலைநோய்மற்றுஞ்சொல்லாநின்ற நோய்களெல்லாம் அடியேனைத் தொடராமல் இரட்சித்தருளவேண்டும் ஆசைகொள்ளாநின்ற அழகிய தேவர்களுக்கெல்லாம் ஒப்பில்லாததெய்வமாகிய ஸ்ரீமன்னாராயணனே.)

துறையூருமர் முதலைக்குலச் சுனையொத்தமன் னவர்வாசலில்
குறையூருநுங் கசைசாடவே குலைக்கின்றதுந் தலைசோரியாய்
முறையூரவதும் பிறருன்னையே துனியாவதுந் தெரியேனலோ
கறையூரமீன கருடாசலா நாருயணா நருயணா,

(இ-ள்) முதலைக்குலஞ்சஞ்சரியாநின்ற துறையையுடைய சுனைபோலேயிராநின்ற துஷ்டமன்னர்வாசலிலே குறைவுகளைச்சொல்லுமிடத்தில் அவர்கள்தருமம்விசாரியாமல் நேர்ந்தபடிக் குபிரம்புகளாலேஅடித்திடத் தேகம்நொந்து தலைகளிலேஉதிரம்பெருகும்போது முறையமிட்டுக்கேள்வியில்லாமற்பிற்பாடு தேவரீரைத்தெய்வமேயென்று வெறுத்துக்கொள்பவனுடைய பாவந்தீர்வதேயில்லை ஆதலால்தேவரீர்சந்நிதானத்திலே முன்னமேமுறையமிட்டேன் திருநறையூரிலேயுந்திருவேங்கடமாகிய கருடாசலத்திலேயும் நிலைபெற்றஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௯௪)

பிணிவிட்டதே விதியாகையும் பிழைவிட்டதே சுகசீவியாய்
பணிவிட்டதே கமனுரெனும் பகைவிட்டதே பலபூசலும்
தணிவிட்டதே யதிஞானமே தரவிட்டதே யுனையோதுவாய்
நணிவிட்டதே யென்மட்டிலே நாருயணா நாருயணா.

(இ-ள்) அடியேனுடையசனனங்கடோறுந் தொடராநின்ற பிணிகளையும் விதிகளையும்யமன்பகைகளையும மன்மதன்சண்டைகளையு மிவைமுதலாகிய யாவையும் நீக்கிச்சுகசீவியாகவும் அதிகஞானியாகவும் வாக்கினுலேஉம்மை ஓதும்படியாகவும் என்மட்டிலே பொருந்துதலாகத்தேவரீருடைய கடாக்ஷவீக்ஷணியஞ்செய்தருளிய ஸ்ரீமந்நாருயணனே. (

வாய்செய்தபுண் ணியங்கோடியென் வழிசெய்தபுண் ணியங்கோடியென், தாய்செய்தபுண் ணியங்கோடிதந் தையர்செய்தபுண் ணியங்கோடியென், பாசெய்தபுண் ணியங்கோடியென் பதிசெய்தபுண் ணியங்கோடியென், நான்செய்தபுண் ணியங்கோடிகா நாருயணா நாருயணா.

(இ-ள்) எனதுவாக்கும் எனது மரபும்எனதுமாதாவும் எனதுபிதாவும் எனதுபாடலும்எனதுஊரும்எனதுநாவும்இவைகளெல்லாஞ் செய்தபுண்ணியம் அனேகங்கோடியானபடியினுலே தேவரீரைப் பிரசன்னமாகக்காணக்கிடைத்ததுஸ்ரீமந்நாருயணனே-எ-று. (௯௬)

உன்கோயிலிலென் கால்சூழவு முன்பாதமென் கண்காணவும்
நின்பாடலென் வாய்பாடவு நின்காரியங் கைசெய்யவும்
என்காதுநின் புகழ்கேட்கவு மென்னெஞ்சநின் னினைவுன்னவும்.
நன்காகநல் வரமேதரு நாராயணா நாராயணா.

(இ-ள்) உமதுதிருக்கோயிலே யென்கால்சூழவும் உமதுதிருவடிகளையென்கண்காணவும் உமதுசரித்திரத்தை யென்வாய்பாடவும் உமதுகைங்கரியத்தையென்கைசெய்யவும் உமதுபுகழையெனதுகாதுகேட்கவும் உமதுதியானத்தையென்னெஞ்சுசெய்யவும் இத்தன்மையாகிய நல்லவரத்தைக்கொடுத்தருளவேண்டும் ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௧௭)

இற்கண்ணெலாநாராயணா மெய்க்கெங்கணு நாராயணா
சொற்கண்ணெலாநாராயணா தொழிலெங்கணுநாராயணா
முற்கண்ணெலாநாராயணா முகமெங்கணுநாராயணா
நற்கண்ணெலாநாராயணா நாராயணா நாராயணா.

(இ-ள்) வீடுகள்யாவையினும் வெளிகள் யாவையினும் சொல்லுகள்யாவையினும் தொழில்கள்யாவையினும் முன்னர்கள்யாவையினும் முகங்கள்யாவையினும் பரிபூரணனாயிருப்பது தேவரீரேயன்றிவேறொருவருண்டோ ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௧௮)

தேறுந்திருப் பதிவேங்கடந் தெரிசித்துநா ரணவென்றுதான்
நூறும்படிப் பவர்பன்னுவார் நூறும்மிருந் துலகாண்டுபின்
பேறும்பெரும் பிள்ளைப்பெறும் பெருமைப்பெறும் பெருவீட்டையே
நாறுந்துழா யணிமார்பனே நாராயணா நாராயணா.

(இ-ள்) வேதமுடிவிலே தேறுகின்றதிருவேங்கடமென்னுந்திருப்பதியைத்தரிசித்த ஸ்ரீமந்நாராயணசதகம் நூறுபாடலையும்படிப் பவர்களும அர்த்தங்களாராய்ப்பவர்களும் நூறுவருஷமிருந்து பிள்ளைகள் முதலாகிய உலகாக்ஷியினது பலனை அநுபவித்தபிற்பாடு அவர்களுக்குப் பெருமையைப்பெற்ற பரமபதத்தைக் காட்சித்தருளாநின்ற பரிமளிக்குந்திருத்துழாயணிந்த திருமார்பையுடைய ஸ்ரீமந்நாராயணனே-எ-று.

நனிவாழிநின் பல்கோயிலு நனிவாழிநின் பலதேவிமார்
நனிவாழிநின் னடியாரெலா நனிவாழிநின் பலவைபவம்
நனிவாழிநின் வடவேங்கட நனிவாழிநின் கவிகற்றபேர்
நனிவாழிநின் கவிகேட்டபேர் நாராயணா நாராயணா.

(இ-ள்) சோழநாட்டிலும் பாண்டியநாட்டிலும்மலைநாட்டிலும்நடுநாட்டிலும் தொண்டைநாட்டிலும் வடநாட்டிலும்தேவரீர் நித்தியவுவப்பமாய் விளங்காநின்ற திருவரங்கம் பெரியகோயில் முதல்பரமபதம்அந்தியமாகவிராநின்ற நூற்றெட்டுத்திருப்பதியிலும் பாகவதர்கள் உச்சிவிக்கத் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிராநின்றதேவரீருடைய திருக்கோவில்களெல்லாம் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாகவாழக்கடவது தேவரீருடைய வட்சஸ்தலத்தி லின்பமுற்று வீற்றிராநின்ற மகா லட்சுமியும் பூமிப்பிராட்டியும் நீளாதேவியும் பல்லாண்டு பல்லாண்டுமிகுதியாகவாழக்கடவது திரிகாலங்களிலும் இடைவிடாமல் தமது திருவுள்ளமே ஆலயமாகச்செய்துகொண்டு தேவரீரைத் தியானஞ்செய்யும்கடல்சூழ்ந்த இவ்வுலகத்திலுள்ளபரமபாகவதர்களியாவரும் பல்லாண்டு பல்லாண்டுமிகுதியாகவாழவும்தேவரீருடையமகிமையுற்றுவிளங்கும்வைபவங்கள் பல்லாண்டு வாழவும், சமஸ்கிருத பாஷைக்கும் திராவிட பாஷைக்கும் எல்லையாகியும் சதுர் வேதங்களும் மற்றைச் சாஸ்திரங்களும் சொல்லப் பட்ட பொருள்களுக் கெல்லாம் முடி வாகியும் தர்மத்துக்கு வரம்பாகியும் பூமியும் பூமிதேவிக்கு மணி முடியாகியும் தனக் கொப்பில்லாமல் பெருமை பொருந்திய சொர்ண மய மாகியும் ஓங்கியதேவரீர் எழுந்தருளி யிராநின்ற வடக்கின்கண்ணுள்ள திருவேங்கட மலையும் பல்லாண்டு பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது திரிகாலக் கியானிகளாகிய வசிஷ்ட தர்மதேவ விஸ்வா மித்திர வியாச பராச சுகசவுனகாதிரிஷிகளும் மகாத்துமாக்களாகிய நம்மாழ்வார்முதலாகிய ஆழ்வார்களும் பாகவதோத்தாரகராகிய இராமாநுசாரியரு வரகவிகளான தண்டிபவபூதி காளிதாசன் கம்பர்முதலாகிய கவிச்சக்கிரவர்த்திகளும் பரமபாகவ தோத்தமர்களாகிய அழகியமணவாளப்பிள்ளைப்பெருமாளையங்கார்முதலாகிய பரமபாகவதபக்தர்களுமாகியஇவர்களாற்செய்தருளிய வேதங்களும் வைஷ்ணவாகமங்களாகிய ஸ்ரீபாஞ்சராத்திர வைகானசங்களும் இதிஹாசங்களாகிய இராமாயணபாரதங்களும் வாமம் வாராகமுதலிய புராணங்களும் மற்றுமுள்ள நூல்களுமாகிய இவைகளில் சொல்லப்பட்டிருக்கிற தேவரீருடைய நித்தியகல்யாண குணங்களை அத்தியயனஞ்செய்த பாகவதர்கள்யாவரும் பல்லாண்டு மிகுதியாக வாழக்கடவது இவ்வாறு மகிமையுற்ற தேவரீர் விஷயமாகச்செய்தருளிய கவிகளைச் சிரத்தையுடன் கேள்வியுற்று பாகவதர்கள்யாவரும் பல்லாண்டுபல்லாண்டு மிகுதியாகவாழக்கடவது ஸ்ரீமந்நாராயணனே-எ-று. (௱)

வடவேங்கடநாராயணசதகம்-மூலமும்-உரையும்,

முற்றுப்பெற்றது.